தலையங்கம் :

## கடவுளின் வருகையால் புனித யுக மறுமலர்ச்சி

மகாபாரதப்போரும், அதன் முடிவும் நமக்கு உணர்த்தும் செய்தி ஒன்று உண்டு. அது, தர்ம ஸ்தாபனையும், அதர்மத்தின் அழிவும் என்பதாக உள்ளது. எல்லாம் வல்ல இறைவன் அசரீரியான பரமாத்மா ஒருவரே. இப்பிரபஞ்சத்தின் இயக்கம் பற்றிய முழுமை யான ஞானமும் கூட அவர் ஒருவரிடமே உள்ளது என்பதும், தர்மத்தை நிலைநாட்டும் கைங்கர்யத்தில் அவரே காரண கர்த்தாவாகவும், செய்பவர் மற்றும் செய்விப் பவராகவும் இருக்கின்றார் என்பதும் தெளிவாக விளங்கு கின்றது. மேலும் கீதையில் காணப்படும் வாசகம், அதர்மம் அதன் உச்சத்தைத் தொட்டு விடும் போதெல்லாம் தர்மத்தை ஸ்தாபனை செய்வதற்காக நான் அவதரிக்கிறேன் என்ற வாக்குறுதி நமக்கு ஆறுதலைத் தருகின்ற மகாவாக்கியம் ஆகும். இதன் மூலம் மனித வாழ்க்கை வரலாறு ஒரு தொடர் நாடகம் என்பது உறுதியாகின்றது. மேலும் உலகம் ஒரு நாடக அரங்கம் என்பதும், முடிவில்லாத காலச் சக்கரத்தில் இடைவிடாது, திரும்பத் திரும்ப ஒரே மாதிரியாகவே நடந்து கொண்டே யிருக்கும் நாடகத்திற்கு ஒரு கால வரம்பும், ஆரம்பம், முடிவு, ஆரம்பம் என்று தொடர் கதையாகவும், இதில் ஆரம்பத்தில் தர்மமும், பிறகு அதர்மமும் நாடகப்பாத்திரங்களின் அனுபவங்களாக இருப்பதையும் பார்க்கிறோம். குறிப்பாக தர்மம் எந்த அடிப்படையில் ஸ்தாபிக்கப்படுகிறது, பிறகு எந்த அடிப்படையில் தர்மம், அதர்மம் ஆகிவிடுகிறது என்ற கருவை உள்ளடக்கிய நாடகமாக இருப்பதும் விளங்குகிறது. அதாவது மனிதனின் இயக்கத்திற்கும், அனுபவிக்கும் பலன்களுக்கும் காரணமாக இருக்கின்ற ஆத்மாவின் சூட்சும காரணிகளான மனமும், புத்தியும் தூய்மை நிலையில் இருக்கும் வரை தர்மமும், அவை தூய்மை சக்தியை இழந்து விடும் போது அதர்மமும் வாழ்க்கை அனுபவங்

சங்கமயுகம்

## பொருளடக்கம்

மலர்: 25 ஜூன் - ஜூலை 11 இதழ்: 2


| | | |
|---|---|---|
| 1. | தலையங்கம் | 01 |
| 2. | ரக்ஷா பந்தன் | 03 |
| 2. | பகவான் வாக்கு | 04 |
| 3. | அமைதியைத் தேடி.... | 05 |
| 4. | இயற்கையின் தாண்டவம். | 09 |
| 5. | சுட்டி-படுசுட்டி | 19 |
| 7. | சிறை ஆஸ்ரமம் ஆனது | 23 |
| 8. | இயற்கையும் பாதுகாப்பும் | 25 |
| 9. | காலத்தின் மகிமை | 29 |
| 10. | கவிதை | 31 |


இந்த இதழில் வெளியாகும் ஆன்மீகக் கருத்துக்கள் கலியுகத்தின் இறுதியான இன்றைய புருஷோத்தம சங்கமயுகத்தில் அனைவருக்கும் ஆன்மீகத் தந்தையாக விளங்குகின்ற பரமபிதா பரமாத்மா, பிரஜாபிதா பிரம்மா மூலமாக இப்பூவுலகில் மீண்டும் தர்மத்தை ஸ்தாபனம் செய்வதற்காக அருளிச் செய்த மகாவாக்கியத்திலிருந்து தொகுத்து வழங்கப்பட்டவையாகும்.

ஆசிரியர்

**“தூய்மையே சங்கமயுகத்தின் ஆஸ்தி”**



களாக அமைந்துவிடுகின்றன என்பதுதான்.

இதைப் பற்றிச் சிந்திக்கும்போது, நமது வாழ்க்கை வரலாறுதான் காவியமாகப் படைக்கப் பட்டிருக்கிறது என்பதைப் புரிந்து கொள்கிறோம். மேலும் இந்தக் காவியப் படைப்பிற்கு நிமித்தமாக இருக்கின்ற நாம், நாடகப்படி நமது வரலாற்றின் முன்பகுதியை இன்னொரு முறையும் நடித்து முடித்து விட்டு, அதன் பிற்பகுதியை இப்போது நடித்துக் கொண்டே அதன் இறுதிக்கட்டத்தையும் தொட்டுவிட்டோம் என்ற உண்மையையும் கவனத்தில் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். எப்படி ஊர் நாடகத்திலும் கூட, கடைசிக் காட்சிகள், நாடகக் கதையின் கருவை உணர்த்தும் வகையில், மனதைத் தொடக் கூடிய வகையில் அமைக்கப்பட்டிருக்கிறதோ, அதே போலவே இந்த எல்லையற்ற நாடகத்தின் கடைசி காட்சிகளும் கூட வியப்பூட்டுவதாக இருக்கலாம். திகைப்பூட்டுவதாகவும் கூட இருக்கக்கூடும். அப்படியானால் அக்காட்சி கள் எப்படிப்பட்டதாக இருக்கும்? அதற்காக எதுவரை காத்திருக்க வேண்டியதாயிருக்கும் என்பதை முடிந்தால் யூகிக்கலாம். எனினும் இந்த இடைக் காலம் குறுகிய கால அவகாசமாகவே இருக்கும் என்பது நிதர்சனம்.

இதனைக் கருத்திற்கொண்டுதான் பல்லாண்டு காலமாக மனித குல ஆன்மீக விழிப்புணர்வு சேவை மேற்கொண்டிருக்கும் உலக முழுவதிலுமுள்ள பிரம்மாகுமாரிகளின் ஆன்மீக மையங்கள், மிக முக்கிய செய்தி யினை அனைவரின் கவனத்திற்கும் கொண்டு வந்திருக் கின்றன. அதாவது இப்போது இக் கல்பத்தின் முடிவான சங்கமயுக காலம் என்றும் நாடகப் படியும், தான் அளித்த வாக்குறுதியின் படியும் மீண்டும் இப்போது பரமாத்மா, தர்ம ஸ்தாபனை கைங்கர்யத்தின் பொருட்டு பாரதத்தில் அவதாரம் செய்து விட்டார் என்றும் இந்த எல்லையற்ற நாடகத்தில் அவரவர் உடல் ஆதாரத்தில் நடித்துக் கொண்டிருக்கும் ஆன்மாக்களாகிய நம் அனைவரின் ஆன்மீகத் தந்தை நம்மை அழைத்துச் செல்ல வந்து விட்டார் என்ற உண்மையை ஒவ்வொருவரும் இப்போதாவது புரிந்து கொள்ள வேண்டும் என்பதாக இருக்கின்றது. அடுத்து இதுபற்றி எனக்குத் தெரியாது என்று சொல்லக்கூடியவர் ஒருவர் கூட இருக்கக்கூடாது என்பதும் முக்கியமானதாக இருக்கின்றது.

முக்கியத்துவம் வாய்ந்த இந்தச் செய்தி யினை அனைவர் கவனத்திற்கும் கொண்டு வரும் நோக்கத்தோடு, பிரம்மா குமாரிகள் இயக்க மானது, கடந்த 75 ஆண்டுகால சேவையின் முத்தாய்ப்பாக **2011- 2012-வது ஆண்டினை அதன் பவள விழா ஆண்டாக அறிவித்திருக் கிறது.** இந்த அறிவிப்பும் இது சார்ந்த நிகழ்ச்சி களும் கூட செய்தி சேர வேண்டியவர்களுக்கெல்லாம் சென்றடைய வேண்டும் என்ற குறிக் கோளுடன் செய்கின்ற சேவையாகவே இருக்கும்.

நடந்ததும், நடப்பதுவும் நாடகமே. நடித்ததும் ஆன்மாக்களாகிய நாம் தான். ஆத்மாவுக்கு ஜாதியில்லை, மதமுமில்லை. மரணமுமில்லை. அழிவற்ற ஆத்மாக்களாகிய நாம் நடிப்பதற்காக, பரந்தாமத்திலிருந்து இந்த பூமிக்கு வந்தோம். உடலை ஆதாரமாக எடுத்து நடித்தோம். இப்போது நாடகம் முடிகிறது. ஆகையால் இப்போது விடுமுறை நேரமாகவும் இருப்பதால் ஓய்வுக்காக வீடு திரும்ப வேண்டும். இதற்கு முன்பாக நாம் நமது தந்தை பரமாத்மாவை இங்கு தான் சந்திக்க வேண்டும். வாழ்க்கைப் பயணத்தில் நாம் இழந்துவிட்ட உண்மையானதும் நமக்குச் சொந்தமானதுமான தூய்மை, அன்பு, அமைதி, ஆனந்தம் ஆகிய ஆஸ்தியை நமது வாரிசுரிமையாகப் பெற்றுக் கொள்ளவும் வேண்டும். இதன் தொடர்பாக, பாரதத்தை தாயகமாகக் கொண்ட புனித யுக மறுமலர்ச்சி உண்டாகும். இதுபற்றி அறிந்து கொள்ளலாம். எனினும் பல விதமாகச் சிந்திப்பதற் கான நேரம் முடிந்துவிட்டது. இது செயலாற்றும் நேரம் **இப்போதில்லையேல் வேறு எப்போதுமில்லை.**




# ரக்ஷா பந்தன்

## புனித கங்கண நூல் அணி விழா

புனித வாழ்வினை நினைவூட்டி, ஒரு சகோதரி தன் சகோதரருக்கு அணிவிக்கும் அன்புக் காணிக்கை தான் ராக்கி.

அன்பு நிறைந்த சகோதரி, தனது சகோதரரின் மணிக்கட்டில் புனித கயிற்றினை அணிவிப்பது என்பது, அந்த சகோதரர் காலம் உணர்ந்து, எல்லாம் வல்ல சிவ பரமாத்மா அருளும் ஞானம் கற்று தூய்மை, சுகம், சாந்தியுடன் வாழ வேண்டும் என்ற உயர்ந்த நல்லெண்ணத்தை வெளிப்படுத்தும் ஒரு புனித சடங்காகும்.

புனிதமாயிரு, தீயவைகளிலிருந்து விலகியிரு - இதுவே தன் சகோதரன் பால் கொண்டுள்ள அன்பின் அடையாளமுமாகும். இதனை நினைவூட்டும் நினைவுச் சின்னமே ராக்கி எனும் புனித அணிகலன்.

இதுபற்றிய ஒரு கதை உண்டு. இந்திராணி, இந்திரனுக்கு அசுரனை வெல்வதற்காக (தீய குணங்கள் எனும் அசுரன்) அணிவித்ததும் இந்த ராக்கியே என புராணங்கள் கூறுகின்றன. ஒவ்வொருவரும் வாழ்வில் நடைமுறையில் தூய்மையைக் கடைப்பிடித்து தெய்வீகம் எனும் ஏணிப்படியில் மென்மேலும் உயர்ந்து செல்ல புனிதமான இந்த ஞாபககார்த்தம் மனோ பலத்தைத் தருவதாக ! இப்புனித கங்கணம், உண்மையில் புனித சகோதரியின் தெய்வீகப் பரிசாகும். மேலும் இது, மனித வாழ்வின் இறுதி லக்ஷியமாகிய முக்தி, ஜீவன் முக்தி எனும் இலக்கை நோக்கி ஒவ்வொருவரையும் அழைத்துச் செல்லும் பாதுகாப்பு கவசமும் ஆகும்.




## ஜீவாத்மாவின் திட்டம் மற்றும் பரமாத்மாவின் திட்டம்

ஆத்மாக்களாகிய நம் அனைவருக்கும் தந்தையாகிய பரமாத்மா ஒருவர் தான். அவர் 21 ஜென்மத்திற்கு சதா சுகம் அளிக்கக்கூடிய சொர்க்கத்தை நமக்காக ஸ்தாபனை செய்கின்றார். அங்கு துன்பமில்லை. அசாந்தி இல்லை. அகால மரணமும் இல்லை. ஆனால் இங்கு இருப்பது ஜீவாத்மாக்களாகிய பிரஜைகளின் இராஜ்யம். நன்மை செய்ய வேண்டுமென்று திட்டங்களும் போடுகிறார்கள். எவ்வளவு திட்டடங்களை நிறைவேற்றினாலும் கூட பற்றாக்குறையாகவே ஆகிவிடுகிறது. காரணம், ஜனப்பெருக்கம், இதற்காக குடும்பக்கட்டுப்பாடு திட்டமும் உண்டு. கீதையில் பகவான் உபதேசம் காமம் மகா சத்ரு, என்பதாக இருக்கிறது. இதைத் தைரியமாகச் சொல்லக் கூடியவர் யாருமில்லை. இந்த சத்ரு மீது வெற்றியடைந்தால் மட்டுமே எண்ணம் நிறைவேறும்.

கல்பத்தில் இன்னுமொரு காலச்சுற்றில் இப்போது கடைசி நேரம். இங்குள்ள அத்தனை பேரும் வீடு திரும்ப வேண்டும். இதன் அறிகுறிகள் நிதர்சனமாகத் தென்படுகின்றன. 5000 ஆண்டுகளுக்கு முன்பு நடந்ததைப் போலவே மகாபாரதப் போர் எதிரிலேயே காத்திருக்கின்றது. புதுப் புது திட்டங்கள் போடுகிறார்கள். இது ஒன்றும் பயன் தராது. ஏனெனில் பரமாத்மாவாகிய தந்தையின் திட்டம் எல்லோரையும் இப்போது தன்னோடு, அழைத்துச் செல்வதாக இருக்கிறது. பகவான் வாக்கு எல்லோரும் இனிமையான வீடு திரும்ப வேண்டிய தருணம். என்னைத் தவிர வேறு யாரும் உங்களை முக்தி தாமுக்கு அழைத்து செல்ல முடியாது. இதுவரை நீங்கள் நிறைய தீர்த்த யாத்திரை செய்திருக்கிறீர்கள். இப்போது நீங்கள் முக்திதாம் யாத்திரைக்குத் தயாராக இருக்க வேண்டும். ஏனெனில் என்னுடன் அசரீரியாக வீடு திரும்ப வேண்டும்.

இந்த பழைய உலக இராஜ்யம் முடிவுக்கு வந்துவிட்டது. நீங்கள் இந்த பழைய உலக சேற்றில் துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள். இது புதுப்பிக்கப்பட வேண்டும். ஆத்மாக்களாகிய நீங்களும் இயற்கையும், தத்துவங்களும் கூட தூய்மையாக வேண்டும். ஏனெனில் இப்போது பாவங்களால் பானை நிரம்பி வழிந்து கொண்டிருக்கிறது. இது உடைந்து சிதறவும் வேண்டும். இந்த உலகம் புதுமை ஆகவும் வேண்டும்.



# அமைதியைத்தேடி

*பி.கு துர்காபிரசாத், சென்னை*



ஒரு மலரானது மலரும்போது, தன்னிடம் இயல்பாக உள்ள நறுமணத்தை வெளிப்படுத்தி நான்கு திசைகளிலும் பரவச் செய்கிறது. சூரியன் உதயமாகும்போது தன்னிடம் இயற்கையாக உள்ள ஒளியை வெப்பத்தை இவ்வுலகிற்குத் தருகிறது. இரவில் வரும் சந்திரன், தனது குளிர்ச்சியால் இப்புவியை குளிர்விக்கிறது. மலையிலிருந்து வரும் தென்றல் நகரத்தை தொடும்போது, பல்வேறு மலர்களின் நறுமணத்தை சுமந்து வந்து நம்மையெல்லாம் மகிழ்விக்கிறது. இவ்வாறு இயற்கையின் அம்சங்கள் ஒவ்வொன்றும், தன்னிடம் உள்ள இயல்புகளை தனக்குள் மறைத்து வைக்காமல், வெளிப்படுத்துகின்றன. அதன் மூலம் அனைத்து உயிர்களுக்கும் சுகத்தை தருகின்றன. ஆனால் இறைவனது படைப்பிலேயே மிக உயர்ந்த படைப்பாக உள்ள மனிதன் அமைதியை அனுபவம் செய்ய முடியாமல் வெளிப்படுத்த முடியாமல், அதை வெளியில் தேடி அலைந்து கொண்டு இருக்கின்றான். மனிதனின் இந்த நிலைக்கு காரணம் காலமா? இயற்கையா? இல்லை அவனது செயல்களா? இதற்கான பதிலும் பகவானிடமிருந்தே வருகிறது. அவர் கூறுகிறார்: மனதால், சொல்லால், செயலால் பிறருக்கு துக்கத்தை கொடுக்காதீர்கள். நீங்களும் துக்கத்தை எடுக்காதீர்கள். இதை நடைமுறை வாழ்க்கையில் கொண்டு வரும்போது அமைதியானது இயல்பாகவே உங்களிடம் தங்கி விடும். அதைத்தேடி நீங்கள் வெளியில் அலைய வேண்டியது இல்லை. இவ்வாறு நாம் நமது செயல் மட்டுமின்றி, அதற்கு அடிப்படைக் காரணமாக இருக்கின்ற எண்ணங்களையும், நல்ல முறையில் பராமரிக்கக் கற்றுக் நிம்மதியாக வாழலாம். வைக்கலாம்.

### மனதின் மகிழ்ச்சி நிம்மதிக்கு ஆதாரமாக அமைகிறது:

ஒவ்வொரு மனதரிடமும் நற்பண்புகள் இருப்பதைப் போல் சில குறைபாடுகளும் இருக்கின்றன. இந்தக்குறைகளை பெரிதுபடுத்தாமல், இறைவன் நமக்கு பரிசாகத் தந்த நற்பண்புகளை மேலாக நினைத்து, அவற்றுடன் மகிழ்ச்சியாக வாழப்பழகிக் கொள்ளுதல் நல்லது. ஒரு வண்ணத்துப்பூச்சி குறைவான காலமே வாழ்கிறது. அது எப்போது வேண்டுமானாலும் பறவைகளுக்கோ அல்லது சிறு பிராணிகளுக்கோ இறையாகலாம். இருந்தாலும், நாளை தனது நிலை என்னவாகுமோ என கவலைப்படாமல் பல்வேறு மலர்களுக்கும் சென்று, அதில் உள்ள தேனை உறிஞ்சி மகிழ் கிறது. மேலும் அதில் உள்ள மகரந்தத்தை இன்னொரு மலருக்கு எடுத்துச் செல்வதன் மூலம், மலர்களின் இனவிருத்திக்கு உதவி செய்கிறது. இந்த சிறு உயிரினத்தைப் போல, நாமும் மகிழ்ச்சியுடன் இருப்போம். அதைப் பிறருடன் பகிர்ந்துக் கொள்வோம். பிறகு நிம்மதி நமது நிரந்தர நண்பனாகி விடும்.

### சுறு சுறுப்பு தேவையற்ற விஷயங்களிலிருந்து விலகி இருக்க உதவுகிறது :

சுறு சுறுப்பாக வாழப் பழகிக் கொள்வது ஒரு கலை. இறைவனது படைப்பில் மிகச் சிறிய உயிரினமாகிய எறும்பு மற்றும் தேனியை பார்க்கிறோம். அவைகள் வாழும் முறையைக் காண்கிறோம். அவைகள் வாழ்வது குறைந்த காலமே. எனினும் காலத்தை வீணாக்காமல் சுறுசுறுப்பாக உழைக்கின்றன. தங்களது சமூகம் மகிழ்ச்சியாக இருக்க உதவுகின்றன. தனது

சகாக்கள் வேலை செய்யும்போது, தான் ஒதுங்கி இருந்தால் தெரியவா போகிறது என ஒரு எறும்போ, தேனியோ நினைப்பதில்லை. தான் செய்ய வேண்டிய வேலையை செவ்வனே செய்கின்றன. மேலும் இன்றைய வேலையை நாளை செய்து கொள்ளலாம் என தள்ளிப் போடாமல் அப்போதே செய்கின்றன.

இவற்றைப் போல் சுறுசுறுப்பாக இருக்கும் மனிதர்கள் தங்களை மனப்பூர்வமாக பல்வேறு செயல்களில் ஈடுபடுத்திக் கொள்கிறார்கள். அதில் அவர்கள் மன நிறைவைப் பெறுகிறார் கள். அவர்கள் தங்களது மனதை மற்றும் உடலை ஆரோக்கியமாக வைக்க உதவும் விஷயங்களில் மட்டும் கவனம் செலுத்தி, தேவையில்லாத விஷயங்களை ஒதுக்கி விடுகிறார்கள். இதற்கு நேர் மாறாக, சோம்பலுக்கு அடிமையானவர் தேவை யில்லாத விஷயங்களை தலையில் சுமந்து, பொழுதைக் கழிப்பதில் மிகவும் பிரியமானவர் களாக இருப்பார்கள். இவர்களிடமிருந்து விலகி இருப்பதே மன நிம்மதிக்கான சிறந்த வழி.

**தன்னை உணர்தல் மன நிம்மதிக்கு இன்றியமையாதது:**

தன்னிலை உணர்ந்து எந்த செயலை செய்கிறோமோ அச்செயலின் விளைவானது, செய்பவரை எந்த விதத்திலும் பாதிக்காது. செயலின் முடிவு எப்படி இருந்தாலும், அவர் தன்னுள் நிம்மதியாக இருப்பார். ஒரு நாடகத்தில் நடிப்பவர் நல்லவராக நடித்தாலும், வில்லனாக நடித்தாலும் தான் நடித்துக் கொண்டு இருக்கிறோம் என்ற உணர்வு அவருக்குள் இருந்து கொண்டே இருக்கும். அவர் நடித்து முடித்தவுடன் தனது வேடத்தை கலைத்து விட்டு, சாதாரண மனிதனாக தன் வீட்டிற்கு திரும்புவார்.

அதே போலத்தான் நாடகத்தைப் பார்ப்பவரும் நாடகத்தில் சுகம், துக்கம் சம்பந்தமாக எத்தகைய காட்சிகளைப் பார்த்தாலும், பார்வையாளர் என்ற உணர்வில் இருந்து பார்க்கும்போது அவர் மனதில் எவ்வித பாதிப்புமின்றி, நாடகத்தை பார்த்துவிட்டு வெளியேறுவார்.

**நிமித்த பாவனை நிம்மதியை தருகிறது :**

ஒருவர் நிமித்தமாகி தனது கடமையைச் செய்யும் போது, அவர் நிம்மதியாக செயல்புரிய முடிகிறது. ஒரு வங்கியில் பணிபுரிபவர் லட்சக் கணக்கில் பணத்தைக் கையாண்டாலும், அந்தப் பணம் அவர் மனதில் எவ்வித சலனத்தையும் ஏற்படுத்துவது இல்லை. காரணம் இந்தப் பணம் வங்கியினுடையது. நான் இந்த பணம் சம்பந்தப் பட்ட கடமையில் நிமித்தமாக உள்ளேன் என்ற உணர்வு அவர் மனதில் இருந்து கொண்டே இருக்கும்.

ஒரு வீட்டில் வேலை செய்பவர், தனது முதலாளி சொல்லும் வேலையை ஒரு கருவியாக இருந்து செய்வார். தனது சுய விருப்பம் எதையும் அதில் செலுத்த மாட்டார். செயலின் முடிவு பற்றி கவலைப்படமாட்டார். அதை தனது முதலாளியின் பொறுப்பில் விட்டு விடுவார். இவ்வாறு எவ்வித விருப்பு, வெறுப்பின்றி தனது பணியை அமைதியுடன் செய்வர்.

**தன்னலமற்ற சேவை நிம்மதியைத் தருகிறது :**

சேவை மனப்பான்மையுடன் எந்தவொரு காரியத்தையும் செய்யும்போது அது மன நிறைவைத் தருகிறது. நிம்மதியை அளிக் கிறது. ஒரு நர்ஸ் தனது சுக, துக்கங்களை ஒதுக்கிவிட்டு நோயாளிகளின் துயர் துடைப் பதில் கவனம் செலுத்துகிறார். அவரது தன்னலமற்ற சேவை சம்பந்தப்பட்ட இருவருக் கும் நிம்மதியைத் தருகிறது.

**மனதை ஒரு நிலைப்படுத்தும் பயிற்சி மன அமைதிக்கு அவசியம் :**

எந்த ஒரு பொருளை எடுத்தாலும், அதை உபயோகித்த பிறகு, ஒரு குறிப்பிட்ட இடத்தில் வைக்கும் பழக்கம் இருந்தால், நாம் அப்பொருளை வைத்த இடம் நம் மனதில் தெளிவாக இருக்கும். மறுபடியும் அப்பொருள் நமக்கு தேவைப்படும் போது, அதை தேடிக் கொண்டு இருக்க வேண்டிய அவசியம் இல்லை. அதே போல் நமது மனதை ஒரு குறிப்பிட்ட இடத்திலோ அல்லது விஷயத்திலோ நிலை நிறுத்தக் கற்றுக் கொண்டோமானால், எத்தகைய குழப்பமான சூழ்நிலையிலும் நாம் அமைதியாக நிதானமாக செயல் புரிய முடியும்.

### கடந்த கால நினைவு மன நிம்மதியைப் பாதிக்கிறது :

கடந்த காலத்தை திரும்பிப் பார்ப்பதில் தவறில்லை. அது செய்த தவறுகளை மீண்டும் செய்யாமல் இருப்பதற்காகவே. ஆனால் கடந்தவைகளை திரும்பத் திரும்ப நினைக்கும் போது அது மன நிம்மதியை குலைத்து, நமது முன்னேற்றப் பாதையில் தடைக்கல்லாகி விடுகிறது.

### தூய்மையே அமைதியின் தாய் :

சுத்தமாக இருக்கும் ஒரு அறையில் ஒவ்வொரு பொருளும் அதனதன் இடத்தில் தெளிவாகத் தெரியும். அந்த அறை வெளிச்சமாக, காற்றோட்டமாக இருக்கும். அந்த அறையில் இருக்கும் போது நமக்கு நிம்மதியும், மகிழ்ச்சியும் உண்டாகும். இதே போல் நமது மனதை தூய்மையாக வைக்கப் பழகிக் கொள்ளும் போது, நமது எண்ணங்கள் தெளிவாக இருக்கிறது. அதனால் நமது சொல் மற்றும் செயல் நேர்மையாக அமைந்து நமக்கும் பிறருக்கும் சுகம்,சாந்தியைத் தருகிறது.

### சகிப்புத்தன்மை அமைதியின் தோழன் :

ஒரு மனிதன் நிம்மதியாக வாழ்வதற்கு, உணவு, உடை, இருப்பிடம் இவை மூன்றும் அவசியம் ஒருவர் பசி, நோய், முதுமை, ஆதரவற்ற நிலை, மழை, வெயில், குளிர், அவமானம், இவற்றையெல்லாம் பொறுத்துக் கொண்டு ஏதோ நம்பிக்கையுடன் வாழ்கிறார். காரணம் அவருக்கு பிறரை விட சகிப்புத் தன்மையோடு வாழ வேண்டிய கட்டாயம். இந்த சகிப்புத்தன்மை அவருக்கு இவ்வளவு கஷ்டங்களிலும் நிம்மதியைத் தருகிறது.

### மனப்பூர்வமான மரியாதை மனித உறவில் நிம்மதியைத் தருகிறது :

மரியாதை என்பது வற்புறுத்தி பெறக் கூடியது அல்ல. மனதால் விருப்பத்துடன் கொடுக்க வேண்டிய அணுகு முறை. ஆதலால் தன்னைவிட வயதில், பொருளாதாரத் தில், படிப்பில், பதவியில் ஒருவர் தாழ்ந்த நிலையில் இருந்தாலும், அவருக்குரிய மரியாதையைத் தருவதே சாலச் சிறந்தது. இதனால் சம்பந்தப்பட்ட இருவருக்கும் - இடையே உள்ள உறவானது அமைதியுடன், மகிழ்ச்சியுடன் நடக்கிறது.

### மாற்று வழி மன நிம்மதியை தருகிறது :

நாள் முழுவதும் வேலைக்குச் சென்று விட்டு வீடு திரும்பும் ஆண்களோ / பெண்களோ ஒரு குறிப்பிட்ட நேரத்தை தங்களுக்கு பிடித்தமான தியானம், இசை, ஓவியம் வரைதல், மன மகிழ்மன்றம் செல்லுதல் போன்ற விஷயங்களில் செலவிடும்போது களைத்துப் போயிருக்கும் மனதுக்கு நல்ல ஓய்வு கிடைக்கிறது. அவர்களால் தங்கள் குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாக இருக்க முடிகிறது.

### சான்றோரின் நட்பு :

இவர்களது தொடர்பு, நமது துக்கம், அசாந்திக்குக் காரணமான விகாரங்களிலிருந்து, விலகி இருக்க நமக்கு உதவி செய்கிறது. நமது ஆன்மீக பலத்தை மேம்படுத்திக் கொள்ள நாம் செல்லும் பாதையை சீரமைத்துக் கொள்ள இவர்கள் உதவி புரிகிறார்கள்.

இவ்வாறு மேற்கூறிய வழிகள் எல்லாம் அமைதியைத் தேடி அலையும் மனிதனுக்கு எப்போது சாத்தியமாகும்? ஒரு கவிஞர் கூறுகிறார் :

**"நெஞ்சுக்கு நிம்மதி ஆண்டவன்**
**தன்னை நினைத்தால் எல்லாம் உனக்குள்ளே"**

தன்னை புரிந்து கொண்டு ஆண்டவனை நினைக்கும்போது, நீ விரும்பியது எல்லாமே உனக்கு கிடைத்து விடும் என அழகாகக் கூறுகிறார். தன்னை ஆத்மா எனப் புரிந்து தனது ஆன்மீகத் தந்தையை சர்வ சம்பந்தங் களுடன் நினைத்து, அவர் வழியில் நடக்கும் போது மேற்கூறிய வழிகளில் செல்வது நமக்கு எளிதாகும். நமக்குள் இருக்கும் அமைதியை நிரந்தரமாக்கிக் கொள்ள முடியும்.

நாம் செல்லும் வழியில் சோதனைகள் வரும். **இந்த சோதனைகள் எல்லாம் நாம் எந்த அளவுக்கு நமது குறிக்கோளை அடைவதற்கு தகுதியுள்ளவராக மாறி இருக்கிறோம்** என்பதை நமக்கு உணர்த்தவே வருகின்றன. இதைப் புரிந்துக் கொண்டால், நாம் அடையும் தோல்வி கூட நமது வெற்றிக்கான படிக்கட்டாக அமைந்து விடும். நிம்மதியுடன் நமது இலட்சியப் பயணத்தை இனிதாக்கிக் கொள்ள முடியும்.

# திடீரென நடக்கும்

விநாசம் நடக்கும். விநாசம் திடீரென நடக்கும் என்று வெகு காலமாக செய்தி வெளியாகிக் கொண்டே தானிருக்கிறது. ஆனால் இப்போதைக்கு அப்படி நடக்கும் என்று வெளிப்படையாகத் தெரியவில்லையே என்று நினைக்காதீர்கள். நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடந்து கொண்டேயிருக்கின்றன. வருங்காலத்திற்கான திட்டமும் தயார் செய்யப்படுகின்றன. கட்டிட கட்டுமானப்பணிகளும் தொடர்ந்து நடை பெற்றுக் கொண்டு தான் இருக்கின்றன. இதெல்லாம் நடக்கும். இதைப் பற்றிச் சிந்தித்தும், பார்த்தும், இதைச் சார்ந்திருப்பவர்களாக ஆகிவிடாதீர்கள். நடப்பது நடந்தே தீரும். அதுவும் திடீரென நடக்கும் எப்போது? எப்போது ? என்று அந்த நேரத்தை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்காதீர்கள். நேரம் என்பது உங்களது படைப்பு. நீங்கள் மாஸ்டர் படைப்பாளி. படைப்பவர், படைக்கப்படுவதைச் சார்ந்தவராக இருக்க மாட்டார். நேரம், உங்களது படைப்பு உங்களுடைய கட்டளைக்காகக் காத்திருக்கிறது. ஆகவே தான் பாப்தாதா கூறுகின்றார். எல்லைக்குட்பட்டதைச் சார்ந்திருக்காதீர்கள். எப்போதும் தயாராக இருங்கள். சார்ந்திருப்பதிலிருந்து விடுபட்டு, சுதந்திரமாக இருங்கள். வாழ்கையிலிருந்து விடுதலை என்பதற்கான நேரம் ஒரு வினாடி தான். ஆகையால் எதிர்பார்த்துக் காத்திருப்பதை விட்டு விட்டு, முயற்சி செய்யுங்கள். தீவிரப்படுத்துங்கள். சம்பூரணம் ஆகிவிடுங்கள்.

ஒரு வாரத்தில் இரண்டு நாட்களைப் பற்றி எனக்குக் கவலையே இல்லை. ஒன்று நேற்று. இரண்டாவது நாளை. - *ராபர்ட் ஜோன்ஸ்*

# இயற்கையின் தாண்டவம்

பி.கு. சுவாதி, சென்னை

சாஸ்திரங்களில் வர்ணிக்கப்பட்ட சங்கரரின் ருத்ர தாண்டவம் தற்பொழுது துவங்கிவிட்டது என்று கூறினால் அது மிகையாகாது. ஏனென்றால் பொருளாதார வீழ்ச்சி, உலகம் தழுவிய தட்ப வெப்ப மாற்றம், நாடுகளிடையே சண்டை, சச்சரவு, அதி நவீன ஆயுத உற்பத்தி இவையாவும் எல்லையைக் கடந்த நிலைக்கு சென்று விட்டதை நாம் உணரத் தவறவில்லை. இவை அனைத்தும் **கிணறு வெட்ட பூதம் கிளம்பிய கதை** போலாகி விட்டது என்றே கூறலாம்.

பல்வேறு சம்பவங்களும், சூழ்நிலையும் சமிக்ஞை அளித்துக் கொண்டு தான் உள்ளது நமக்கு, அதாவது இயற்கை அன்னையை வெகுவாக துன்புறச் செய்து விட்டோம் என்பது மட்டுமல்லாது, நாம் அளித்துக் கொண்டிருக்கும் ஒவ்வொரு துன்பத்திற்கும் எதிர்விளைவை சந்தித்துக் கொண்டும் உள்ளோம் என்பதை மக்கள் பொதுப்படையாக ஒத்துக் கொண்டு தான் இருக்கிறார்கள். இதன் அடையாளமாகத் தான் சமீபத்தில் ஏற்பட்ட சுனாமி ஆழிப்பேர் அலை ஜப்பானை தாக்கியது. இத்துடன் மட்டுமல்லாது பூமி மற்றும் சமுத்திரத்திற்கு ஏற்பட்ட அவமதிப்பினால் பூகம்பம், கடல் கொந்தளிப்பு என்ற வடிவில் இயற்கை தனது சீற்றத்தை காட்டிக் கொள்ள தவறவும் இல்லை.

ஒருபுறம் இங்ஙனம் சூழ்நிலை இருப்பினும் கூட பல ஆயிரம் ஆண்டுகளாக மனித இனத்திற்கு இயற்கை தூய காற்று, சுத்தமான தண்ணீர், உணவு, வளமான பூமி, இவை அனைத்தையும் கொடுத்து பாலனை செய்து மகிழ்வித்தும், சொல்ல முடியா வண்ணம் செல்வத்தையும் அளித்திருந்தது. இயற்கை அன்னை பெரும் சேவகனாக பணியாற்றியிருந்தது அந்த கால கட்டத்தில். பின்பு நாம் இயற்கைக்கு கைமாறு அளிப்பதற்கு பதிலாக இயற்கையின் சட்டத்தை மதிப்பதற்கு மாறாக பேராசை மேலும் அகங்காரத்தை அழிவிற்கான சாதனமாக்கி உள்ளோம். விஞ்ஞான வளர்ச்சியின் காரணமாக பெரிய பெரிய தொழிற்சாலைகள் காடுகளை தன் வசமாக்கி விட்டது. நிலத்தடி நீர் பாதிக்கப் பட்டது, சுரங்கங்கள் வளம் குன்றி விட்டன, சோலைவனம் பாலைவனமாக காட்சி தர ஆரம்பித்து விட்டது, நீரும் மாசுபட்டு அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்வது கடினமாகி உள்ளது. இக்கட்டுரையின் நோக்கம் நிகழ்கால சூழ்நிலையை பற்றி வர்ணித்து மேலும் துக்கம் அடையச் செய்ய வேண்டும் என்பது அல்ல, மாறாக இறைவன் அளித்து வரும் சத்தியமான ஞானத்தைப் பற்றியும் அதனை எவ்வாறு இந்த கலியுக துக்க சூழ்நிலையில் பயன்படுத்தி பலனை அடைய வேண்டும் என்பதே ஆகும்.

பல்வேறு தர்மங்கள் பல்வேறு விதமாக படைப்பவர் மற்றும் படைப்பின் ரகசியத்தை அவரவருடைய அனுபவத்தின் அடிப் படையிலும், அறிந்த வகையிலும் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

பாரதத்தின் பல்வேறு வேத சாஸ்திரங்களின் வர்ணனையின் படி அதர்மத்தின் உச்ச கட்ட நிலை ஏற்படும்போது மீண்டும் 5000 வருடங்களுக்கு முன்பு போல தர்மத்தை நிலை நாட்டவும் அதர்மத்தை அழிக்கும் பொருட்டும் இந்த காலச்சக்கரத்தில் பரமாத்மா சிவன் வர வேண்டிய அவசியம் உள்ளது. அவர் வருகை தரும்போது கர்மத்தின் விளைவுகள் பற்றியும், வாழ்க்கை யில் தூய்மையை கடைப்பிடித்தல், உடல் உணர்வு சார்ந்த சிந்தனைகளை மாற்றி ஆன்மீக

மேலும் தெய்வீக வாழ்க்கை முறையை வாழ்தல் போன்றவற்றின் விளக்கத்தினை எடுத் துரைக்கிறார். மேலும் அவர் இத்தருணத்தில் கூறுவது என்னவென்றால் மீண்டும் அப்பேற் பட்ட சூழ்நிலை வரப் போகின்றது அதாவது இயற்கையின் சீற்றம் மேலும் அதிகமாகவே தான் இருக்கும். **சங்கரரின் ருத்ர தாண்டவம் தற்போது துவங்கி விட்டது** இதற்கு காரணம் மனிதனின் செயலானது இயற்கைக்கு விரோதமானதாக இருப்பதே ஆகும்.

இந்த நேரத்தில் சுய நலம் மற்றும் பெறுகி வரும் எதிர்மறை செயலுக்கான கசப்பான பழத்தை புசிக்க வேண்டியும் உள்ளது.

ஆம் ! இது உண்மையாகவே உலகம் தழுவிய அவசர நிலை பிரகடனம் செய்யப் பட்டுள்ள தருவாயாகும். அப்படியெனில் இந்நிலையில் நாம் என்ன செய்ய வேண்டும் ? இதற்கு பதில் **மாற்றம் கொண்டு வருதல்** என்பதே. நாம் மனிதர்கள் கண்ணோட்டத்தில் அகங்காரம், பேராசை, கோபம், காமம், பற்றுதல், பொறாமை மேலும் கவனக்குறைவு ஆகிய வற்றை கொண்டு வந்திருக்கிறோம் அல்லவா? அதனை தூய்மையாக மாற்ற வேண்டும், மேலும் சம்பந்தம் தொடர்புடன் சேர்த்து இயற்கையின் இந்நிலைக்கும் நாமே பொறுப்பானவர்கள் என்பதை உணர்தலும் அவசியமாகும். ஆகவே தான் பரமாத்மா சிவன் மீண்டும் நம்முடைய இயல்பான நற்பண்பு களான தூய்மை, அமைதி, அன்பு மேலும் மகிழ்ச்சி எனும் நற்பண்புகளை செயலில் அனுபவம் செய்ய வேண்டும் என அறிவுறுத்து கிறார்.

மிகக் குறிப்பாக இத்தருவாயில் பௌதீக கவர்ச்சிகளிலிருந்து நாம் விடுதலை பெற வேண்டும், மற்றும் மனதினை இறைவன் பால் திருப்பி அவருடைய குணங்களையும், சக்திகளையும் அந்த வெற்றிடத்தில் நிரப்புவதும் அவசியமாகும்.

பரமாத்மாவின் சக்திகளையும், குணங்களையும் நிரப்பிக் கொள்ளாததால் தான் நாம் வெகுவாக பலகீனமானவர்களாகி உள்ளோம். எதிர்மறையானவற்றையும், சுபாவத்தையும் வெற்றி கொள்ள வேண்டும். இறைவன் அளித்துக் கொண்டிருக்கும் உயரிய ஞானத்தை கற்று எதிர்மறையாகி விட்ட சூழ்நிலையை இயல்புக்கு கொண்டு வர வேண்டும்.

**பரமாத்மா சிவனின் அன்பான அறிவுரை என்னவென்றால் :**

அன்பான குழந்தைகளே ! வரப்போகின்ற உலக அழிவானது நல்ல மற்றத்தை கொண்டு வருவதுடன் அது சாபத்திலிருந்து விடுவித்து ஆசீர்வாதமாகிவிடும். எனவே, நல்லதொரு மாற்றத்தை வரவேற்போம் ! நாம் மாறி உலக மாற்றத்தை கொண்டு வர உளமாற ஒத்துழைப்போம்

உண்மையாக கடவுளிடம் நம்பிக்கையுடையவராக இருப்பவர்,
எதைப் பற்றியாவது கவலைப்படுபவராக இருப்பாரானால்,
அவர் இதற்காக வெட்கப்பட வேண்டும். - *மகாத்மா காந்தி*

## சகோதர சகோதரிகளே ! இறைவன் வந்துவிட்டார் !

*பி.கு சுப்பிரமணியன், சென்னை*

இறைவன் வந்திருக்கிறார் -- இதை எப்படி நம்புவது என்று அநேகர் கேட்கிறார்கள். அவர்களுக்கு எப்படி புரிய வைக்க வேண்டும் என்று முரளியில் நல்ல ஞான முத்துக்கள் (பாயின்ட்ஸ்) கிடைக்கின்றன. நம் மனதில் பதியவைப்பதற்க்கு சில மணியான முத்துக்கள் இங்கு தரப்பட்டுள்ளன.

அழுக்கடைந்தவர்களை தூய்மை செய்பவரே வாருங்கள் என்று எல்லோரும் பக்தியில் பாவனையுடன் இறைவனை அழைக் கிறார்கள். இறைவனோ சரீரமில்லாதவர்: தனக் கென்று அவருக்கு எந்த சரீரமும் இல்லை. அதே சமயம் அவர் உலக நன்மைக்காக வரவேண்டியதிருக்கிறது. அதுவும் இந்த அழுக்காகிவிட்ட உலகில் வர வேண்டியது இருக்கிறது. அவருடைய பங்கு அப்படி அமைந்திருக்கிறது. அவர் புதிய தூய்மையான உலகில் வரமாட்டார். அங்கே வர அவசியமும் இல்லை. அப்படியானால் அவர் இப்பொழுது வருவது உண்மை. ஏனென்றால் மக்கள் துக்கத்தில் இருந்து அவரை அழைக்கும் பொழுது இரக்க கடலான, ஆத்மாக்களின் தந்தையான பரமாத்மா அவசியம் வர வேண்டும், இல்லையா? மேலும் அவரைப் பற்றி பக்தியில் ஒரு பாட்டும் இருக்கிறது. தூர தேசத்தில் வசிப்பவர், வந்தார் இந்த வேற்று தேசத்தில், இது நம் தேசமில்லை. இது அழுக்காகிவிட்ட அசுர சுபாவம் வியாபாரமாக இருக்கின்ற தேசம். ஆகவே இந்த வேற்று தேசத்தில் வந்தார் என்ற பாட்டு இருக்கிறது. பகவான் படைப்பது சத்யுகம். அது நம் தேசம். இன்றைய கலியுகம் மாறிவிட்ட தேசம். ஆகவே பகவான் வேற்று தேசத்தில் (கலி யுகத்தில்) வந்திருக்கிறார் என்பது புரிய வேண்டிய விஷயம்.

பரமாத்மா வந்து குழந்தைகளான ஆத்மாக்களுக்கு ஞானத்தை வழங்குகிறார். ஞானம் என்பது ஆத்மா, பரமாத்மா, சிருஷ்டிசக்கரம் பற்றிய விபரமாகும். ஆத்மா மிகச் சிறிய சூட்சுமமான ஜோதி புள்ளி வடிவ மாக இருக்கிறது. அதில் 84 பிறவிக்கான அழியாத நடிப்பு பதிவாகி இருக்கிறது. ஆனால் எல்லா ஆத்மாக்களும் 84 பிறவி எடுப்ப தில்லை. எல்லோரும் ஒரே சமயத்தில் சேர்ந்து வருவதில்லை. பரம்தாமிலிருந்து ஆத்மாக்கள் இங்கு வரிசைப்படி நடிக்க வருகின்றனர். பரமாத்மா கூறுகிறார், எப்படி உங்களுடைய ஆத்மா இருக்கிறதோ அப்படி என் ஆத்மாவும் இருக்கிறது. நீங்கள் பிறப்பு, இறப்பு என்பதில் கட்டுப்பட்டு வருகிறீர்கள். நான் அப்படி வருவதில்லை. எல்லோரும் அழுக்கடையும் பொழுது, துக்கம் அடையும் பொழுது என்னைத்தான் அழைக்கின்றனர். இந்த சமயத்தில் நான் வந்து, இராஜயோகத்தை கற்றுக் கொடுத்துக் கொண்டிருக்கிறேன். துக்கத்திலிருந்து விடுதலை பெறுவதற்க்காக இந்த விஷயம் எந்த சாஸ்திரத்திலும், மத நூல்களிலும் எழுதப்படவில்லை. ஆகவே ஞானக்கடலான மனித குலத்தின் விதையான பரமாத்மாதான் இப்பொழுது சத்யமான புதிய ஞானத்தை வழங்கிக் கொண்டிருக்கிறார் என்பது உண்மையிலும் உண்மையாகும்.

பரமபிதா வந்திருக்கிறார் என்பது இப்பொழுது புரிகிறது. அடுத்து அவர் எப்பொழுது வருகிறார் என்ற கேள்வி எழுகிறது. அந்த கேள்விக்கும் சிவபரமாத்மா முரளியில் விடை தருகிறார். எப்பொழுது அதர்மம் அழியப்போகிறதோ, அப்பொழுது

நான் வருகிறேன். அது, கலியுகம் முடியும் நேரம்: சத்யுகம் உதயமாகும் நேரம். இரண்டும் சங்கமிக்கும் சங்கமயுகத்தில் நான் வருகிறேன் என்று பரமாத்மா கூறுகின்றார். ஏனென்றால் கலியுகத்தில் வந்து புதிய உலகமான சொர்கத்தை ஸ்தாபனை செய்ய வேண்டிய திருக்கிறது. மேலும் பரமாத்மா இப்பொழுது வந்து குழந்தைகள் சொர்கத்திற்குச் செல்லத் தகுதியடைய செய்கிறார். இது அவருடைய வேலை. இதற்கு கண்டிப்பாக சங்கமயுகத்தில் வரவேண்டிய திருக்கிறது. அழுக்கான ஆத்மாக் கள் வசிக்கக்கூடிய கலியுகத்தில் வந்து சத்யுகம் செல்ல வழிகாட்ட வேண்டியதிருக்கிறது. ஆகவே அவர் வரும் நேரம், இரண்டு யுகத்திற்கும் இடைப்பட்ட சங்கமயுகம் தான் என்பதை நன்றாகப் புரியமுடிகிறது. அவர் புதிய உலகை ஸ்தாபிக்க, இந்த சங்கமயுகத்தில் பிரஜா பிதா பிரம்மா என்பவருடைய பதீதமான சரீரத்தில் வருகிறார். ஏனென்றால் பிறவிக்கு அப்பாற்பட்டவராக இருப்பதால் தனியாக எந்த சரீரமும் இல்லை. ஆகவே, 84 பிறவிகளையும் சம்பூர்ணமாக முடித்த ஆத்மாவின் (பிரம்மா வின்) உடலில் பிரவேசிக்கிறார். பிரம்மா பாபா இந்த சிருஷ்டி என்ற நாடகத்தில் அதிக நடிப்பை நடித்துள்ள மூப்பு வாய்ந்தவர் என்பதால் அவர் சரீரத்தில்தான் வருகிறார். மற்ற ஆத்மாக்கள் அனைவரும் அவரைவிட நடிப்பு குறைவாக இருப்பதால் மற்றவர் சரீரத்தில் பரமாத்மா வருவதில்லை. இது புரிய வேண்டிய விஷயம்.

பரம தந்தையான சிவபரமாத்மா மேலும் கூறுகிறார்: எல்லையற்ற தந்தையான எனக்கு குழந்தைகளான அனைத்து ஆத்மாக்கள் மீதும் எல்லையில்லாமல், பார பட்சமில்லாமல், ஏராளமான அன்பு இருக்கிறது. அதன் காரணமாக எல்லோரும் துக்கமடைந்து, விகாரத் தினால் அழுக்கடைந்து (பதீதமாக) என்னை அழைக்கும் பொழுது எனக்கு பரம்தாமை விட்டு கீழே வந்து புது உலகத்தை ஸ்தாபிக்க வேண்டும் என்ற சங்கல்பம் (எண்ணம்) வருகிறது. இதுபற்றி சாஸ்திரத்தில் கூட ஒரு வரி வருகிறது. பகவானுக்கு சங்கல்பம் (எண்ணம்) வந்தது உடனே புது சிருஷ்டி (சத்யுகம்) ஏற்பட்டது. அப்படியானால் டிராமாவின் திட்டப்படி, குறிப்பிட்ட சமயத்தில் அந்த குறிப்பிட்ட சங்கல்பம் எழும்பி இருக்க வேண்டும் இல்லையா? அந்த குறிப்பிட்ட நேரம் சங்கமயுகமாக இருக்கிறது. இதுபற்றி பக்தி மார்கத்தில் வியாசரின் பகவத்கீதையிலும் ஒரு குறிப்பு வருகிறது. பகவான் கூறுவதாக வியாசர் எழுதுகிறார். பாரத தேசத்தில் எப்பொழுது தர்மம் அழிந்து, அதர்மம் ஓங்கு கிறதோ, அப்பொழுது சத்தியமான தர்மத்தை ஸ்தாபிக்க நான் வருகிறேன். இந்த குறிப்பு மூலமும், பாரத தேசத்தில் அதர்மம் ஓங்கி இருக்கிற நேரம், தர்மம் அழிந்து வரும் நேரம், இப்பொழுதுதான் என்பது நாம் அனுபவ பூர்வமாக அறிகிறோம். இதன்மூலம் பகவான் சத்திய தர்மத்தை (ஆதி சனாதன தேவி தேவதா தர்மம்) ஸ்தாபிக்க வந்திருக்கிறார் என்பதை புத்தி பூர்வமாக புரிந்து கொண்டு, நம்பிக்கை கொள்ள வேண்டும்.

**சிவபகவான் மேலும் கூறுகிறார் :** சிவபரமாத்மாதான் இந்த சத்தியமான ஞானத்தையும், ஸ்ரீமத்தையும் தருகிறார். மேலும் அவர்தான் இராஜயோகத்தை கற்பித்துக் கொண்டிருக்கிறார் என்று கண்களை மூடிக் கொண்டு நம்புங்கள். பிரம்மா கூறுகிறார் என்று நினைக்க வேண்டாம். சிவபாபாவாகிய நான் பொறுப்பு, நான் உங்களுக்காக இருக்கி றேன். எப்பொழுதும் சிவபரமாத்மா தான் கூறுகிறார் என்று நினையுங்கள். நான் சொல்வ தாக நம்பிக்கை கொண்டால், உங்களுக்கு நன்மை ஏற்பட்டுக் கொண்டே இருக்கும். பிரம்மாவே ஏதேனும் சொன்னாலும் அதற்கும் நானே பொறுப்பு, ஏனென்றால் இவர் எனக்கு ரதமாக இருக்கிறார். லாபம், நஷ்டம் எது வந்தாலும் நான் சரி செய்து விடுவேன். இந்த

நம்பிக்கையால்தான் உங்கள் விகர்மங்கள் (பாவங்கள்) அழியும். சக்தியும் அதிகரிக்கும்.

இவைகள் நல்ல ஆதாரமுள்ள ஞானக் கருத்துக்களாக இருந்தாலும், சுய அனுபவம் தான் இறைவன் வந்திருக்கிறார் என்ற நம்பிக்கை ஏற்படுவதற்கு மிகச் சிறந்த ஆதார மாகும். விஷம் (விகாரம்) நிறைந்த இந்த தாழ்ந்து சீர்கெட்டுவிட்ட கலியுகத்தில் தூய்மை யான ஆத்மாவாக யோகியாக ரோஜாமலர் போன்ற நறுமணமுள்ள குணவானாக நான் மாறி வருகிறேன், என்றால் அதற்கு அன்புக் கடலான சிவதந்தை வழங்கிய ஞானமும், யோகமும், தாயான பிரம்மா பாபாவின் பாலனையும் (வளர்ப்பும்) தான் மூல காரணங் களாகும். மாயா என்ற 5 விகாரங்கள் தாக்கிய பொழுது பாபா தந்த ஞானமும், யோகமும் நம்மை காப்பாற்றி இருக்கிற அனுபவம் நமக்கு இருக்கிறது. நான்கு பாடங்கள் மூலம் நாம் அதீந்திரிய சுகத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். இதன்மூலம் பரமாத்மா உலகிற்கு வந்துவிட்டார் என்ற ஆழமான நம்பிக்கை சுய அனுபவம் மூலம் நம் உள்ளத்தில் உதயமாகிறது. 8 லட்சத்திற்கும் அதிகமானோர், ஒரே கொள்கை, ஒரே செயல்பாடு, ஒரே ரசனை, ஒரே சம்ஸ்காரத் துடன் ஒரே குடும்பமாக இணைந்து இருப்ப தற்கு பகவான் நம்மை வழிநடத்திக் கொண்டிருக்கிறார் என்பது தெளிவாகிறது. இதன் மூலம் ஏற்படும் நம்பிக்கை நமக்கு அவருடைய ஸ்ரீமத்படி நடக்க சக்தியை தருகிறது. இல்லறத்தில் கணவன் மனைவி உறவு காணப்பட்டாலும், இருவரும் தாமரை மலர் போல் விலகியும், அன்பாகவும் வாழ்ந்திட உறுதியைத் தருகிறது. பாவங்கள் சூழ்ந்துள்ள இந்நாளில், பாவகர்மத்தை செய்யாமல் அதே சமயம் உலக வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கவும், பகவான் தருகிற ஸ்ரீமத் உதவி செய்கிறது. சொந்த அனுபவம் தரும் நம்பிக்கைதான், இறைவனுக்காக ததீஜி ரிஷிபோல எலும்பையும் வழங்கி தியாகமும் சேவையும் எளிதாக செய்ய ஊக்கத்தையும் உற்சாகத்தையும் தருகிறது. இறைவன் வந்திருக்கிறார்- இதை எப்படி நம்புவது என்று கேட்பவருக்கு நமது சொந்த அனுபவங்களை உங்கள் முன் வைக்கின்றோம்.

## மறுபிறவியும், கர்மமும்

மனித ஆத்மாவின் வாழ்க்கைப் பயணத்தில் கர்மமும், மறுபிறவியும் ஒரு சட்டத்தின் அடிப்படையில் நிகழ்வதாக உள்ளது. ஒவ்வொருவருக்கும் மறுபிறவி உண்டு. இதில் ஒவ்வொரு பிறவியின் சூழ்நிலைகள் வெவ்வேறு விதமாக அமைகின்றன. அதாவது ஒவ்வொரு பிறவியிலும் தனக்கு ஆதாரமாகக் கிடைக்கும் சரீரம், கறுப்பு, வெள்ளை, ஆண், பெண், ஆரோக்கியமுள்ள அல்லது ஆரோக்கியமில்லாத, வசதியுள்ள அல்லது வறுமையுள்ள, மகிழ்ச்சியுள்ள அல்லது கவலையுள்ள என்று வேறுபட்ட சூழ்நிலைக்குக் காரணமாக இருப்பது அல்லது தீர்மானிப்பது, தன்னுடைய பூர்வ ஜென்ம கர்மம் என்பதாக உள்ளது. நம் ஒவ்வொரு கர்மத்தின் மூலமாக, நமது வருங்கால பிறவியை உண்டாக்குகிறோம். அதாவது மறுபிறவி, அவரவர் செய்த கர்மத்தை அடிப்படையாகக் கொண்டும், வருங்காலம் கடந்த காலத்தை அடிப்படையாகக் கொண்டும் பிரபஞ்ச சட்டத்தின் படி நிகழ்கிறது.

மனதில் எப்போது சுயநலம், பேராசை, லோபம், நான் எனது எனும் அஹங்காரம் நுழைகிறதோ அப்போது பிரச்சனைகள் ஆரம்பமாகின்றன

## விநாச காலம் நெருங்கும்போது இதற்கான அடையாளம் எப்படி இருக்கும் ?

1. ஒவ்வொருவரும் கடவுள் வந்துவிட்டார் என்பதை அறிவார்கள்.

2. நிறையப் பேர்களுக்கு காட்சியும் தெரியும்.

3. சந்நியாசிகள், ராஜாக்கள் ஞானம் பெற வருவார்கள்.

4. எப்போது பகவான் வந்துவிட்டார் என்ற செய்தி பரவுமோ அப்போது விமோசனம் பெறுவதற்காக அநேகர் தேடி வருவர்.

5. பத்திரிகை வாயிலாகவும் ஏராளமானோர் அறிந்து கொள்வார்கள்.

6. குழந்தைகளாகிய நீங்கள் ஆத்ம அபிமானி நிலையில் இருப்பீர்கள். ஒரு தந்தையின் நினைவில் ஆனந்த அனுபவத்தில் இருப்பீர்கள்.

7. பறக்கும் அனுபவ நிலை அனுபவம் அநேகருக்கு ஏற்படுகிறது என்றால், முடிவான நேரம் என்று பொருள்.

## மூன்றாவது உலகப் போர் எப்போது ஆரம்பம் ஆகும்?

1. சத்யுகம் எனும் பொற்காலம் மலருவதற்கு அவசியமான எல்லா ஏற்பாடுகளும் தயார் என்றால் மூன்றாவது உலகப் போர் ஆரம்பமாகும்.

2. நீங்கள் எல்லோரும் தூய்மையாகிவிடும்போது ஆரம்பமாகும்.

3. உங்களிடம் எல்லா தெய்வீக குணங்களும் நிரம்பி விடும்போது ஆரம்பமாகும்.

4. உங்கள் படிப்பு முடிந்ததும், போர் ஆரம்பமாகும்.

5. நீங்கள் கர்மாதீத் நிலை அடைந்து விடும்போது போர் ஆரம்பமாகும்.

5000 ஆண்டுகளுக்கு முன்பு எந்த ஒரு மகா பாரதப்போர் நடந்ததோ, அதே போன்று நடக்கும் என்பதைப் பற்றித்தான் பாபா இங்கு குறிப்பிடுகின்றார். இந்தப்போர் மூலமாகவே உங்களது வெற்றி நிச்சயம் ஆகும். இது நடக்கத்தான் வேண்டும். ஏனெனில் இதன் மூலமாகவே சொர்க்க வாசல் திறக்கும்.

# சுட்டி, படுசுட்டி



**சுட்டி :** அண்ணே! அண்ணே!

**படுசுட்டி :** யாரு? வாங்க தம்பி, வாங்க உள்ளே வாங்க.

**சுட்டி :** மார்கெட்டுலே, கொஞ்சம் சாமான் வாங்க வேண்டியிருந்தது. அதை அனுப்பி வச்சிட்டு அப்படியே உங்களையும் பாத்த மாதிரி இருக்கும்"னு" வந்தேன்.

**படுசுட்டி :** சரி, ரொம்ப சந்தோஷம் தம்பி. எல்லோரும் சௌக்கியம் தானே?

**சுட்டி :** எல்லோரும் நல்லபடியா, சௌக்கியம் எல்லாம் பெரியவங்களோட ஆசிர்வாதம்.

**படுசுட்டி :** நல்லது தம்பி அப்புறம் வேற என்ன சேதி?

**சுட்டி :** சேதின்னு சொன்னா, உங்ககிட்ட வந்தா புத்திக்கு ஏதாவது சாப்பாடு கிடைக்கும். போனமுறை வந்தப்ப மறுபிறவி பத்திப் பேசினோம். உங்களுக்கு நினைவு இருக்கும்.

**படுசுட்டி :** ஆமாம் தம்பி. நினைவிருக்கு. "மனுஷ" ஆத்மா மத்த ஜீவராசிகள் எல்லாத்துலேயும் பிறவி எடுத்தபிறகு கடைசியா கிடைக்கிறதுதான், "மனுஷ" பிறவின்னு சொல்றாங்களே, அது சரியான்னு கேட்டீங்க. நான் அப்படி இல்லேன்னு சொன்னேன். அதுதானே?

**சுட்டி :** ஆமாண்ணே, அதுதான் "மனுஷ" ஆத்மா, பிறவியிலே செஞ்ச கர்மத்துக்கு தகுந்தாற்போல பலவிதமா பிறக்கும். ஆனா எத்தனை பிறவி எடுத்தாலும் மனுஷப்பிறவி தான் எடுக்கும்னு சொன்னீங்க. ஆனா சிலருக்கு மறுபிறவியிலே நம்பிக்கை இல்லாம இருக்கு அதைப்பத்தி----?

**படுசுட்டி :** ஆமா தம்பி. நானும் அப்படி கேள்விப்பட்டிருக்கிறேன். அவுங்க என்ன சொல்றாங்கன்னு தெரியுமா?

**சுட்டி :** அண்ணே! அவுங்க சொன்னதை நான் இப்படித்தான் புரிஞ்சுக்கிட்டேன். அதாவது ஆத்மா ஒரு தடவைதான் ஜென்மம் எடுக்குது. பலனையும் அனுபவிக்குது. உடலை விட்டுப் பிரிஞ்சுட்டா, அது நியாயத்தீர்ப்பு நாள் வரைக்கும் கல்லறையிலே தான் இருக்கும். அன்றைக்கு கடவுள்கிட்டேயிருந்து தீர்ப்பு வாங்கிட்டு பரலோகம் போயிடும்ன்னு சொன்னதாக ஞாபகம்.

**படுசுட்டி :** தம்பி! நீங்க சொல்றமாதிரிதான் நானும் கேள்விப்பட்டிருக்கேன். நியாயத்தீர்ப்பு நாள்ன்னு சொன்னா, அது என்ன? எப்படி? எப்போங்கிறதைப் பத்தியும் தெரிஞ்சுக்கிறனும். அதைப்பத்தி பிறகு பேசலாம். இப்போ ஆத்மா மறுபிறவி எடுக்குது அப்படீங்கறதுக்கான அநேக காரணங்கள் இருக்குது. அதைப்பத்திப் பேசலாமா? நேரமிருக்கா?

**சுட்டி :** மறுபிறவியிலே எனக்கு முழு நம்பிக்கை இருக்கு. இருந்தாலும், கொஞ்சம் வெளக்கமா சொல்லுங்கண்ணே .

**படுசுட்டி :** தம்பி ! இப்போ நம்ம ஊரையே எடுத்துக்குவோம். நம்மைப்போல பிறந்திருக் கிறவங்க வாழ்க்கை எல்லாமே ஒன்னுபோல இருக்கா? சில குடும்பங்கள் வசதியாயிருக்கு. சில குடும்பங்கள் கஷ்டத்துலே இருக்கு. இன்னும் சிலருக்கு என்னவெல்லாமோ பிரச்சினைகள் திடீர்ன்னு வருது. வியாதியிலே அவஸ்தைப் படறாங்க. முடமா பிறக்கிறாங்க. இது மட்டுமில்லை தம்பி. சிலர் ஆணாகப் பிறக்கிறாங்க, சிலர் பெண்ணாகப் பிறக்கிறாங்க. இதுக்கெல்லாம் அவசியம் இருக்குன்னா, காரணம் இல்லாமலா இருக்கும்? ஒரு ஜென்மம்தான் எடுக்கிறாங்கன்னு சொன்னா எப்படி?

**சுட்டி :** ஆமாண்ணே. இது யோசிச்சுப் பார்க்கவேண்டிய விஷயம்தான் காரணம்

இருக்கும்ன்னு தான் தோணுதண்ணே. நீங்க என்ன சொல்றீங்க.

**படுசுட்டி :** நான்தான் சொல்லிட்டேனே. நீங்கதான் சொல்லனும். என்ன சிரிக்கிறீங்க? சொல்லுங்க தம்பி.

**சுட்டி :** அண்ணே ! எனக்கும் தெரியுது. உங்களைப்போல கருத்தாச் சொல்லத் தெரியாது. நீங்களே சொல்லுங்க.

**படுசுட்டி :** தம்பி, ஒன்னுமட்டும் முக்கியமா தெரிஞ்சுக்குங்க. அதாவது, காரணம் இல்லாமல் ஒரு காரியமும் நடக்கறது இல்லை.

**சுட்டி :** அதென்னமோ நிஜந்தாண்ணே. ஒவ்வொருத்தரும் நடக்கறதப்பார்த்தா வித்தியாசமாத்தான் இருக்கு. சரியா?

**படுசுட்டி :** சந்தேகமே இல்லே தம்பி. படைப்புன்னு சொன்னா? எல்லா காரியமும் நடக்கனும். அப்படி இல்லேண்ணா விருத்தியே இருக்காது. உற்சாகமும் இருக்காது. டல்லா இருக்கும் என்ன நினைக்கிறீங்க.

**சுட்டி :** நீங்க சொல்றது சரிதான். நம்ம அனுபவங்களும் கூட ஒரே மாதிரியா இல்லாம வித்தியாசமாகத்தானே இருக்கு.

**படுசுட்டி :** ஆமா தம்பி. இப்ப பாருங்க தம்பி ! ஆத்மா ஜென்மம் எடுத்து வளர, வளர என்னவெல்லாம் கர்மம் செய்யுதோ, அதுக்கான பலன் இருக்கும்தானே! பலன் அப்படீன்னு சொன்னா, செஞ்ச கர்மத்துக்கான பலனை அந்த ஒரு ஜென்மத்திலேயே அனுபவிச்சு முடிப்பது இல்லே. மிச்சமிருக்கத்தான் செய்யும். நல்லா யோசிச்சுப்பாருங்க, எவ்வளவு காரியங்கள் செய்யறோம், அத்தனைக்கும் பலனும் இருக்கும் தானே! அதனாலதான், அப்படி ஆத்மாவுல சம்ஸ்காரமா பதிவாகி அனுபவிக்காம மிச்சமிருக்கிற சம்ஸ்காரத்துக் கான பலா பலன்களை அனுபவிக்கிறதுக்காக, ஆத்மா இன்னும் பிறவி எடுத்துதான் ஆகனும். இது தொடரவும் செய்யும். என்ன சொல்றீங்க தம்பி.

**சுட்டி :** ஆமாண்ணே! இது ஒரு முக்கியமான காரணமாத்தான் படுது.

**படுசுட்டி :** பாருங்க தம்பி, குழந்தை பிறக்குது. பிறந்த பச்சைக்குழந்தையைப் பார்த்திருப்பீங்க கவனம் இருக்கா? சில சமயம் திடீர்னு சிரிக்கும். திடீர், திடீர்ன்னு அழுகும். எதிரிலே யாரும் இருக்க மாட்டாங்க. இதுக்கு என்ன காரணம் சொல்லுவீங்க.

**சுட்டி :** அண்ணே! அழுகுதுன்னு சொன்னா, வயிறு வலிக்கலாம், சீதோஷ்ண நிலை உடம்புக்கு ஒத்துக்காமா இருக்கலாம்.

**படுசுட்டி :** அப்புறம் எறும்பு கடிச்சிருக்கும்ன்னு சொல்வீங்க தம்பி! நீங்க சொன்னதும் ஒரு காரணம்தான். இல்லேன்னு சொல்லலே, பாருங்க தம்பி! அந்தக் குழந்தைக்கு எப்படிப் பட்ட குடும்பத்துலே பிறந்திருக்கோம், சொந்தக்காரங்க யாரு? இதெல்லாம் அப்போ அதுக்குத் தெரியாது, இருந்தாலும் சும்மாவே சிரிக்கும், அழுகும். இதை தெரிஞ்சுக்க முடியும். ஏன் இப்படி?

**சுட்டி :** இதுக்கு முன்பிறவி சம்ஸ்காரம்தான் காரணம்ன்னு சொல்றீங்க, அப்படித்தானே?

**படுசுட்டி :** ஆமா தம்பி. வேற காரணம் உங்களுக்குத் தெரிஞ்சிருந்தா சொல்லுங்க. இன்னும் பாருங்க தம்பி குழந்தைக்கு கர்மேந்திரியங்கள் வளர்ச்சியடையாம இருக்கிற காரணத்துனாலேதான் எதனாலே சிரிப்பு வருது, எதனாலே அழுகை வருதுங்கறதை -- அதனால சொல்ல முடியாம இருக்கு. தம்பி! இப்படி இன்னும் கூட பல காரணங்களைச் சொல்ல முடியும். இருப்பீங்கதானே , அபூர்வமா இந்தப் பக்கமா வர்றீங்க, சொல்றேன் கேளுங்க. தம்பி! நாம பார்த்திருக்கிறோம், வயசு கொஞ்சமாத்தான் இருக்கும். சிறு வயசுலேயே வயதுக்கு மீறின சாமார்த்தியம் இருக்கும்.

நம்பவே முடியாது. அப்படி பாடுவாங்க, ஆடுவாங்க, அளவுக்கு மீறிய ஞாபக சக்தி இருக்கும். இந்த மாதிரியான ஒரு முதிர்ச்சி எப்படி கிடைச்சிருக்கும்ன்னு நினைக்கிறீங்க.

**சுட்டி** : இதுக்கும் பழைய சம்ஸ்காரம்தான் அப்படீங்கிறீங்க .

**படுசுட்டி** : வேற என்ன காரணம் சொல்ல முடியும்! நீங்களே யோசிச்சுப் பாருங்க. இவ்வளவு யோக்கியதை, இவ்வளவு சின்ன வயசுலே சாத்தியமாயிருக்குன்னு சொன்னா, ஆச்சரியமாயிருக்கு இல்லையா? பாருங்க தம்பி ! சின்ன வயசுலே, திடீர்னு வீட்டை விட்டுப் போயிடுறாங்க, சன்னியாசியா ஆயிடுறாங்க, கோவிச்சுக்கிட்டு வீட்டை விட்டுப் போகிற வங்களைப் பத்தி சொல்லலே. உண்மை யிலேயே சன்னியாசம் மேற் கொண்டிருக்கிற பல மகான்களைப் பத்திக் கேள்விப் பட்டிருக் கிறோம். பார்த்தும் இருக்கிறோம். இதுக்கு என்ன சொல்லப் போறீங்க?

**சுட்டி** : அண்ணே! கொஞ்சம் விளக்கமா சொன்னாத் தேவலை.

**படுசுட்டி** : தம்பி ! இந்த மாதிரி குழந்தைங்க முந்தின ஜென்மத்திலே அந்தந்த வித்தையிலே தேர்ச்சியடைஞ்சவங்களா இருந்திருப்பாங்க. இந்த சம்ஸ்காரம் அவுங்ககிட்ட இருக்கும். இதை அனுபவிக்கனுமில்லையா? அதனாலே, இந்த மாதிரி சூழ்நிலை இருக்கிற குடும்பத்துல வந்து பிறப்பாங்க. இந்த சம்ஸ்காரம் ஏற்கனவே இருக்கிறதால, சின்ன வயசுலே கொஞ்சம் கத்துக்கிட்டாலே போதும். சீக்கிரமாவே அந்தக் கலையிலே தேர்ச்சி யடைஞ்சுடுறாங்க. நான் இப்படித்தான் நினைக்கிறேன். இதுக்கும் ஏதாவது சாக்குபோக்கு சொன்னாலும் சொல்வாங்க, என்ன நினைக்கிறீங்க.

**சுட்டி** : சொன்னாசொல்லிட்டுப் போறாங்கண்ணே, உண்மைன்னு ஒன்னு இருக்கத்தானே செய்யும்.

**படுசுட்டி** : நல்லா சொன்னீங்க தம்பி. நமக்கு நல்லா அனுபவம் இருக்கு. குடும்பத்துலே, ஒரு தாய் தந்தைக்குப் பிறந்த ரெண்டு குழந்தை களோட சுபாவம் ஒரே மாதிரி இருக்கிறதில்லே. ஒரே மாதிரி சூழ்நிலை, ஒரே மாதிரி வளர்ப்பு எல்லாம் ஒன்னு போல இருந்தாலும் குணம் வேற, வேற மாதிரி இருக்கிறதைப் பார்க்கிறோம். இது எதனாலே?

**சுட்டி** : அண்ணே! நீங்க சொல்றாப்போல பூர்வ ஜென்ம சம்ஸ்காரமாத்தான் இருக்கனும். பூர்வ ஜென்ம வாசனை அப்படீன்னு சொல்றதைக் கேள்விப்பட்டிருக்கேன். ஆனா முந்தின ஜென்ம விஷயம் ஏன் நினைவுல இருக்கிற தில்லே அப்படீன்னு கேட்கிறாங்க?

**படுசுட்டி** : அப்படியா? நல்ல கேள்விதான். ஆனா நாம எல்லோருமே யோசிச்சுப் பார்க்கலாம். நமக்கே புரியும் நினைவே இல்லாமல் இருக்கிறதே பெரிய புண்ணியம்னு படும்.

**சுட்டி** : சரிதாண்ணே, பழசெல்லாம் நினைவுலே இருந்தா இந்த ஜென்மத்துலே நிம்மதியே இருக்காது.

**படுசுட்டி** : சரியாச் சொன்னீங்க தம்பி. இந்தப் படைப்பைப் பத்தித் தெரிஞ்சுக்க வேண்டிய விஷயங்கள் நிறையவே இருக்கு. எல்லாத் தையும் தெளிவா புரிஞ்சுக்க முடியுமா? முடியும்ன்னு நான் நினைக்கலே. அபூர்வமா அப்பப்போ சில விஷயங்கள் நடக்கிறதையும் பார்க்கிறோம். அதுலேயும் ஏதாவது ரகசியம் அடங்கியிருக்கலாம். நான் நினைக்கிறேன், இந்தப் படைப்பை பத்திச் சொல்லனும்ன்னா ரொம்பக் கச்சிதமா, ரொம்ப நியாயமா இருக்குன்னுதான் நான் மனப்பூர்வமா நம்புறேன் தம்பி.

**சுட்டி** : சரியாச் சொன்னீங்கண்ணே, நான் அப்படித்தான் நினைக்கிறேன். ரொம்ப நன்றி, வர்றேண்ணே, வணக்கம்.

# வெறுப்பூட்டுகிறவர் மற்றும் வெறுப்புக்குள்ளாகுபவர்

- ★ இவர்களில் வெறுப்பூட்டுகிறவரே, அதிக துன்பத்திற்குள்ளாகிறார்.
- ★ ஒவ்வொரு எதிர்மறை உணர்வும் (நெகட்டிவ் எமோஷன்) உடலில் அமிலத்தை (ஆசிட்) சுரக்கச் செய்கிறது. இந்த அமிலம், தான் தங்கியுள்ள பாத்திரத்தையே அழித்து விடுகிறது.
- ★ கோபமும், ஏமாற்றமும் விருந்தினரைப் போன்று அவ்வப்போது வருகின்ற மன எழுச்சிகளாகும்.
- ★ வெறுப்பு என்பது அதிகரித்துக் கொண்டேயிருக்கின்ற மன எழுச்சியின் தாக்கமே.
- ★ ஏதாவதொரு சம்பவத்தின் காரணமாக துன்பம் நேரிடுகிறது என்றால் அத்துன்பம் அற்பமானதாக இருக்கக்கூடும். இருப்பினும், அதைப்பற்றியே மனதில் திரும்பத் திரும்ப நினைவு செய்து, துன்பத்தை அதிகப்படுத்திக் கொள்கிறோம்.
- ★ வெறுப்பு உங்களை உங்கள் உண்மையான நிலையிலிருந்து தூரமாக்கி விடுகிறது.
- ★ உங்கள் மூலம் வெறுப்புக்குள்ளானவர், உங்கள் இதயத்தில் மானசீக ஹீரோவாக அமர்ந்து கொண்டு உங்களை ஆட்டிப்படைப்பார்.
- ★ பொதுவாக, மக்கள் என்ன செய்ய வேண்டுமென்று நினைக்கிறார்களோ, அதையே தான் செய்வார்கள். ஏனெனில் அந்த சமயத்தில் தாங்கள் செய்வது சரிதான் என நினைக்கிறார்கள். வேண்டுமென்றே செய்யப்படும் தவறுகள் அபூர்வம். மேலும் இவை அறியாமையின் காரணமாக நிகழ்ந்து விடுகின்றன. எது தெரியாதோ, அது அவர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை என்பதுதான்.
- ★ உங்களது வெறுப்பைத் தீவிரப்படுத்துவீர்களேயானால், அது பழி தீர்க்கும் நோக்கத்தை ஊக்குவிப்பதாகும்.
- ★ பொதுவாக சரியாக நடந்து கொள்வதைவிட, தவறு செய்துவிடும் போதுதான் உங்களிடமிருந்து அன்பை எதிர்பார்க்கின்றார். ஆதலால் உங்களிடம் அன்பில்லாதவரிடமும், அன்பாயிருங்கள்.
- ★ ஒவ்வொருவருக்கும் அவரவர் செய்த பலன் கிடைக்கவே செய்யும். ஆதலால் நீங்கள் செய்வதுதான் சரி. மற்றவர் செய்தது தவறு என்று நிரூபிக்க வேண்டுமா என்ன?
- ★ மன்னித்தல், மற்றவருக்கு நீங்கள் அளிக்கும் விடுதலை அல்ல. மாறாக மற்றவரிடமிருந்து, உங்களை நீங்கள் விடுவித்துக் கொள்கிறீர்கள்.
- ★ நடந்தவற்றில் படிப்பினையைக் கற்றுக் கொண்டு, முன்னேறிக் கொண்டேயிருங்கள்.

***இதயத்தின் எல்லைகளை விரிவடையச் செய்து,***
***எதிரிகளையும் நண்பர்கள் ஆக்குவோம்.***

# சிறை ஆஸ்ரமம் ஆனது

சிறை ஆஸ்ரமம் ஆனது. பாராம்பங்கி மாவட்டத்தில், பந்தோசராயே கிராமத்தில் இருக்கும் பிரம்மாகுமார் ஓம்பிரகாஷ் கூறுகிறார்.

ஏழைக் குடும்பத்தில் பிறந்த என்னை, கெட்ட எண்ணங்கள் தனது மிகப்பெரிய வலையில் சிக்க வைத்திருந்தது. நான் மகா பாவங்கள் செய்திருந்தேன். காமம், கோபம், பேராசை, பற்று, அகங்காரம் போன்றவை என்னை ஒரேயடியாக பிடித்து அடிமைப்படுத் திருந்தது. ஒருநாள் கோபம் என்ற பூதத்தின் வசப்பட்டு கொலைக் குற்றத்திற்கு ஆளாகி விட்டேன். அதனால் நான் ஆயுள் தண்டனை அனுபவிக்க வேண்டியதாகிவிட்டது. எனது கஷ்டம் நாளுக்கு நாள் அதிகரித்தது. எப்போதும் மன அழுத்தத்தில் இருந்தேன். எனினும் இன்னும் பழிவாங்க வேண்டும் என்ற எண்ணத்திலிருந்து விடுபடாமலேயே இருந்தேன்.

ஒருநாள் பிரம்மாகுமார் சகோதரர் ஒருவரைச் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. என்னுடன் சத்திய ஞானம் பற்றிப் பேசினார். அவர் மிக அன்புடன் கேட்டார். உங்களுக்கு ஞானத்தைப் புரிந்து கொள்ள முடிகிறதா? நான் ஆம் என்று பதிலளித்தேன். பிறகு அவர், ஏழுநாள் பாடம் கேட்க வேண்டும். அப்போது மற்ற விஷயங்களும் உங்களால் எளிதில் புரிந்து கொள்ள முடியும் என்று கூறினார். தொடர்ந்து முரளி வகுப்பில் கலந்துகொள்ளுங் கள் என்றும் கூறினார். இவ்விஷயத்தைக் கேட்டு மகிழ்தேன். அதன்பிறகு சிறை வளாகத்தில் ஒரு சென்டர் திறக்கப்பட்டது. மூத்த சகோதரர் அவர்களால் திறப்பு விழா நடைபெற்றது. நான் மற்றவர்களோடு நியமப்படி வகுப்பிற்குச் செல்ல ஆரம்பித்தேன். ஞானம் குணங்களால் சிவபாபா என்னை அலங்கரிப் பதை உணர ஆரம்பித்தேன். மேலும் என்ன பலவீனங்கள் இருந்தனவோ, அவைகள் என்னிடமிருந்து விலக ஆரம்பித்தது. ஒருநாள் பரமபிதா சிவ தந்தையின் நினைவில் தியானத்தில் அமர்ந்திருந்தபோது, திடீரென்று சிவபாபா ஆத்மாவின் சாட்சாத்காரம் செய்வித்தார். இரு புருவங்களுக்கு மத்தியில் ஒரு வெண்மை நிறப்புள்ளி பிரகாசித்துக் கொண்டிருப்பது போன்று எனக்கு அனுபவம் ஆகியது. இப்போது எனக்கு நம்பிக்கை ஏற்பட்டுவிட்டது. எனக்கோ ஒரு சிவபாபாவைத் தவிர யாருமில்லை, பிற அனைத்தும் சரீர, சம்மந்தங்கள் என்பது புரிந்தது. நானோ ஒரு அழிவற்ற, மரணமற்ற ஆத்மா ஆவேன். தினமும் அமிர்தவேளையில் எழுந்து பாபாவிடம் ஆன்மீக உரையாடல் செய்கிறேன். பாபா எனக்கு வரதானம் கொடுத்து ஞானம், குணம், சக்திகளால் அலங்கரிக்கின்றார். இப்போது நான் முற்றிலும் மன அழுத்தத்திலிருந்து விடுபட்டுவிட்டேன்.

பல்ராம்பூர் மாவட்டம், அக்ஹிவா கிராமத்தைச் சேர்ந்த பிரம்மா குமார் குல்லே சகோதரர் கூறுகின்றார்.

15 வயதில் நான் காமம், கோபம், பேராசை, பற்று, அகங்காரம் என்ற சிறையில் கைதாகி விட்டேன். 17 வயதான போது, சில காரணங் களால் ஒரு மனிதருடன் சண்டையிட நேர்ந்து கொலை நடந்துவிட்டது. யார் என்னை சிறைக்கு அனுப்பினாரோ, நான் அவரை பழிவாங்க வேண்டும் என்று யோசித்துக் கொண்டிருந் தேன். சிறையில் பிரம்மாகுமார் சதோதர, சகோதரிகளின் சந்திப்பு ஏற்பட்டது. பி.கு. சகோதரர் ஒருவர் நீங்கள் 7 மணிநேரம் கொடுங்கள் உங்களது முழு டென்ஷனும் விலகிவிடும் என்று கூறினார். பிறகு எனக்கு

ஆத்மா, பரமாத்மாவின் ஞானம் பற்றிய வகுப்பு ஆரம்பமாகிவிட்டது. ஆத்மா பற்றிய ஞானம் எனக்கு மிகவும் பிடித்திருந்தது. நான் நியமப்படி வகுப்பிற்குச் செல்ல ஆரம்பித்தேன். நாள்தோறும் பரமாத்மா நினைவில் யோகம் செய்ய ஆரம்பித்தேன். சுயம் பகவானிடம் பேசுவேன் என்று நான் கனவில் கூட நினைத்ததில்லை. இப்போது எனக்கு பாபா வுடைய சத்யமான அறிமுகம் கிடைத்து விட்டது. இனிமையான பாபா, மூன்றாவது கண்ணைத் திறந்துவிட்டார். மேலும் சிருஷ்டிச் சக்கரத்தின் ஞானத்தைக் கொடுத்து, முதல்-இடை-கடைசியின் ரகசியத்தைக் கூறி அதிர்ஷ்டசாலி ஆக்கி விட்டார் என்று நான் மிகவும் நன்றி தெரிவிக்கின்றேன். பகவான் மடியில் நான் குழந்தையாகி இருக்கிறேன். ஆகவே நான் மிகவும் பாக்யசாலி. சத்தியமான பகவான் தந்தையின் ரூபத்தில் எனக்கு பாலனை கொடுத்துக் கொண்டிருக்கிறார். சத்திய ஆசிரியர் ரூபத்தில் எனக்கு சத்யமான கீதை ஞானத்தைக் கூறிக்கொண்டிருக்கிறார். மேலும் சத்குருவின் ரூபத்தில் வாழ்க்கை என்ற படகை அக்கரை சேர்த்துக் கொண்டிருக்கிறார். நான் எப்போதும் சிவபாபாவின் குடை நிழலில் இருக்கிறேன். நாள்தோறும் இரண்டு, மூன்று முறை முரளி கேட்கிறேன். பாபாவின் ஞானம்-குணங்களின் மழை முரளி மூலமாக பொழிகிறார். இப்போதோ, என்னுடைய பாபாதான் எனக்கு உலகமாகும். நான் பாபாவுடையவன், பாபா என்னுடையவர். இதே பாடலை பாடிக் கொண்டிருக்கிறேன். சிறை இப்போது எனக்கு சிறையாகத் தோன்றவில்லை. ஆஸ்ரமம் போன்று தோன்றுகிறது. இன்று நான் முற்றிலும் டென்ஷனிலிருந்து விடுபட்டுவிட்டேன். பாபாவுடைய நினைவின் போதையில் இருக்கிறேன். **நன்றி ஞானாமிர்தம்**

## தைரியம்

தைரியமுள்ளவர் ஆவதற்கு, தான் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியிலும் தன்னை அதிருஷ்டசாலி எனக் கருத வேண்டும். இதுதான் முதல்படி. அடுத்து கஷ்டமான சூழ்நிலையிலும் கூட, தான் அதிர்ஷ்டசாலி என்ற நம்பிக்கை உறுதியாக இருந்தால், தன்னிடமுள்ள சாதனங்களை பயனுள்ள வகையில் பயன்படுத்த முடியும்.

## மன்னிப்பு

தன்னை மாற்றிக் கொள்வதற்கு உதவுகின்ற ஒரு வழி மன்னிக்கும் சுபாவம். இவர் நல்லெண்ண முடையவராக, ஒத்துழைக்கும் மனப்பான்மை உடையவராக, அன்பான வராக, மரியாதைக்குரியவராக மற்றும் நம்பிக்கைக்குரியவராகவும் இருப்பது அவசியம். இவை மன்னிக்கும் சுபாவ முடையவராக ஆவதற்கு உதவும் நல் ஆசிகள் போன்றவை ஆகும்.

**வாழ்க்கை என்ற விளையாட்டை விளையாட்டாய் பார்த்தால் பிரச்னைகள் இலவம் பஞ்சாய் மாறும்.**

**பிறரிடம் எதிர்பார்ப்பதைத் தவிர்த்து எனது வாழ்விற்கு நானே பொறுப்பு என உணருங்கள்.**

# இயற்கை சீற்றமும், நமது பாதுகாப்பும்

*சில ஆரூடங்கள் - சில முன்னறிவுப்புகள்*

கொலராடோ மற்றும் பெங்களூர் பல்கலைக்கழகத்தின் புவி இயல் விஞ்ஞானி களின் கூற்று இவ்வாறாக உள்ளது. பல லட்சம் மக்களை பலி வாங்கக்கூடிய மிக பலத்த பூகம்பங்கள் நிகழக்கூடிய நிலையில் இந்தியா இருந்து கொண்டிருக்கிறது. இந்த ஆபத்து இருக்கின்றது. ஏனெனில் பூமிக்கடியில் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் மாறுதல்கள் இந்தியத் துணைக்கண்டத்தை மத்திய ஆசியாவை நோக்கித் தள்ளி நகர்த்திக் கொண்டிருக்கின்றன. இதன் காரணமாக, இமயமலைத் தொடரைச் சேர்ந்த பாறைத் திட்டுகள் பலத்த இறுக்கத்துக்குள்ளாகிக் கொண்டிருக்கின்றன. இதனால் எந்த நேரத்திலும், அதாவது வெகு சீக்கிரமாகவே பாறை வெடித்துப் பிளவுகள் உண்டாகும். புவி இயல் வல்லுநரான ரோஜெர் பில் ஹாம் என்பவர் 2001ஆம் ஆண்டு ஆகஸ்டு 25ஆம் நாள் டைம்ஸ் ஆம் இந்தியாவில் வெளியான பத்திரிக்கைச் செய்தியை சுட்டிக் காட்டி தவிர்க்க முடியாத விளைவுகள் நடக்கக்கூடும் என எச்சரிக்கின்றார். மேலும் குறிப்பிடுவதாவது வில்லை போன்ற பகுதியை இறுகப் பற்றிக் கொண்டிருக்கும் முடிச்சானது, தளர்ந்து, பிரிந்து இதன் காரணமாக மிகப்பெரிய பூகம்பம் ஏற்பட்டு இமயத்தை தெற்கு முகமாக உந்தித் தள்ளும். இந்தப் பூகம்பம் ஒரு நிவாரணமாக வும் இருக்கும். வறுத்தத்திற்குரிய விசய மானாலும், இந்தியா மற்றும் இமாலய பாகத்தின் பாறைத் தகடுகள் பிரிவதற்கு ஒன்று இரண்டு பூகம்பங்கள் அவசியமான ஒன்றாகும். இது ரிச்டர் அளவு கோலில் 8.1 முதல் 8.3 வரை யிலான 7 மேஜர் பூகம்பம் வரையிலாக இருக்கும். இவ்வாறாக ஒவ்வொரு பூகம்பத் தாலும் ஒரு கோடி மக்கள் பாதிப்பிற்குள்ளாகும் அபாயகரமான நிலை இருக்கிறது.

ஆசியாவின் சுனாமியால் ஏற்பட்ட அழிவைப் பற்றி உலகம் எதற்காக ஆச்சரியப் பட வேண்டும்? இரு நாட்களுக்கு முன்பாக, 8.5 புள்ளி அளவிலான பூகம்பம் அண்டார்ட்டிக் பகுதியில் உண்டானது இது சுற்றுப் பக்கமுள்ள கண்டங்களை உஷார்படுத்தியிருக்கலாம். நோவா வெள்ளம் ஏற்பட்ட காலத்தில், மிகப்பெரிய பூகம்பங்களும், இதன் காரணமாக அமெரிக்கா உட்பட, அநேக கண்டங்களின் நிலப்பகுதிகளில் மிகப்பெரிய மாற்றங்கள் உண்டாயின. அதாவது பூமியின் நிலப்பரப்பில் விரிசல்களும், ஏற்றத் தாழ்வும் உள்ள நிலையுடையதாக ஆனது. இதன் காரணமாக வடதுருவ காந்தம் வடமேற் காக 23 டிகிரிக்கு நகர்ந்தது. இப்படி விலகிய நிலையில் இருப்பதால் ஏற்படும் சக்தியின் காரணமாக, தலைக்குமேலே ஒரு வாள் ஊசலாடிக் கொண்டிருக்கின்றது. அது எந்த நேரத்திலும் தன் தலை மீது விழும் என்ற நிலை இருந்தால் எப்படி இருக்குமோ அது போன்ற ஒரு நிலையில் தான் மனித இனம் இருந்துக் கொண்டிருக்கின்றது.

நாஸ்டர் டாம் (தனக்கு பிரத்யேகமாகத் தோன்றிய காட்சிகளைப் பற்றி வர்ணணை செய்திருக்கிறார்) என்பவர் பூமியின் நிலப் பரப்பில் உண்டாகவிருக்கும் மிகப்பெரிய மாறுதல்கள் பற்றி, தன்னுடைய மகனுக்கு கடிதம் எழுதினார். அதில் பிரபஞ்சம் முழுவதும் பாதிக்கக்கூடிய அளவில் பெரும் மழை, பெரு வெள்ளம் பிரளயம் உண்டாகும் என்றும், பூமியில் இங்கும், அங்குமாக சிறிய பகுதிகளாக, திட்டு திட்டாக, நிலப்பரப்பு காணப்படுமே தவிர நிலப்பரப்பு முழுவதுமே வெகுகாலம் வரை நீரில் மூழ்கிய நிலை இருக்கும் என்றும் குறிப்பிட்டிருக்கின்றார். அதே சமயம் இப்படியெல்லாம் நடக்காமல் போனாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்றும் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தி

இருக்கின்றார். மேலும் இந்த ஆரூடங்கள் 3797 வரை இருக்கலாம் என்று நாஸ்டர் டாம் குறிப்பிடுகின்றார். இந்த 3797 என்பது தற்சமயம் வழக்கத்தில் உள்ள காலண்டர் கணக்குப்படி ஏறக்குறைய 2037ஆம் ஆண்டாக உள்ளது.

வானியல் பிரகாரமாக மீண்டும் சனி கிரஹத்தின் ஆட்சி வரும் என்றும், இந்த புரட்சிகரமான மாற்றத்தால் சமுதாயத்தில் சட்டம், ஒழுங்கு நிலை பெரிதும் பாதிப்பிற்கு உள்ளாகியிருக்கும் என்றும் கூறப்படுகிறது. இம்மாதிரியான ஒரு குறிப்பு அமெரிக்காவின் கிரௌன் பிரின்ஸின் வெளியீடான 1980 அவநெல் பதிப்புகளில் 13-14 மற்றும் 23-20 வரிகளில் உள்ளன. என்பதாக குறிப்பிடப் பட்டிருக்கின்றது. ஆராட்சி செய்து வெளியிடப் பட்ட மாயன் காலண்டர் கணக்குப்படி, காலச்சக்கர சுற்று 5026 ஆண்டுகளுக்கு ஒரு முறை என கணக்கிடப்பட்டுள்ளது. ஆதலால் மாயன் காலண்டர் கணக்கை பின்பற்றுபவர்கள் 2012ஆம் ஆண்டில் புதிய காலக்டிக் யுகம் உதயமாகும் என்றும் அந்த யுகத்தில் உலகம் தழுவிய மதம் (UNIVERSAL RELIGION) இருக்குமென்றும் இந்த மதம் எல்லா இனங் களையும் ஒரு ஆன்மிக ஒருமைப்பாட்டில் கொண்டு வரும் என்றும் குறிப்பிடப் பட்டுள்ளது.

மத எழுத்தாளராகிய டேவிட் ஜிப்சன் என்பவர் 1999 மார்ச் 21 ஞாயிறு பதிப்பில் வெளியாகியுள்ள கட்டுரையில் காணப்படும் முன்னறிவிப்பு இவ்வாறாக உள்ளது. கம்ப்யூட்டர் மாடல் மூலமாக தயாரிக்கப்பட்ட பைபில் கோட் (BIBLE CODE) பிரகாரம் 2006 ஆம் ஆண்டில் அணு ஆயுத உலகப்போர் நடக்கும். இதே போன்று மைக்கேல் டிரோஸ்னின் பைபில் கோட் பிரகாரம் இது 1997ல் லண்டனில் வெளியாகியுள்ள ஓரியண்ட் புக்ஸ் லிமிடெட் 2001 ஆம் ஆண்டு 6வது பதிப்பில் அணு ஆயுதப்போரால் சர்வநாசம் என்று குறிப்பிடப்படுகின்றது.

மேலும் 1999 டைம்ஸ் ஆப் இந்தியா ஜுன் 20 ஞாயிறு பதிப்பில் நாஸ்டர் டாமின் ஆரூடம் காலம் சென்ற ஜோதிட நிபுணரும், கோலங்கள் மற்றும் மூன்றாவது உலகப்போர் என்ற பதிப்பின் ஆசிரியருமான பி.வி. இராமன் பைபிளிள் உள்ள புதிய ரகசியங்கள் ( BOOK OF REVELATIONS) 1994 பதிப்பு ஆகியவற்றை படித்து ஆராய்ந்து, ஜோதிட-எண்கணித-கைரேகை நிபுணரான அனுபம் கபில் என்பவர் விமர்சனம் செய்திருக்கின்றார். இந்த விமர்சனத்தின் படி நாஸ்டர் டாமின் ஆரூடம் பற்றி ஆரம்ப காலத்தில் மதிப்பீடு செய்த ஹென்ரி ராபர்ட் என்பவர் ( BOOK (1948) CENJIV. VERSE 23) எழுதியிருக்கின்றார். வெகுகாலமாக அமைதியாகவும், பாதுகாப் பாகவும் இருந்த ஒரு நாடு இரசாயண போருக்கு உள்ளாகும் என்றும், நியூயார்க் தாக்கப்படும் ஆனால் அதைவிட பயங்கரமான எதிர்ப்பு ஆயுதங்கள் மூலமாக தாக்குதல் முறியடிக்கப்படும் என்று எழுதப்பட்டிருக் கின்றது. மேலும் இந்த ஆரூடங்கள் இரண்டரை ஆண்டுகள் வேறுபடுகின்றன என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது 1999ஆம் ஆண்டு நடக்குமென்று குறிப்பிடப் பட்ட ஆரூடம் 2001 ஆம் ஆண்டு செப்டம்பரில் நடந்திருக்கின்றது என்பது குறிப்பிடப்படுகிறது.

இன்னொரு வாக்கியத்தில் கீழை நாடொன்று பயங்கர தாக்குதலுக்கு உள்ளாக்கப் பட்டு அந்த நாட்டில் அநேக மாதங்கள் (ROYAL BIRD ( EAGLE) கழுகு கொடி பறக்கும் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. மேலும் கிழக்கு சுவரானது இடிந்து சரியும் என்றும் ஆங்கிலோ-அமெரிக்கா கூட்டு இராணுவ தாக்குதலால் தனது நாட்டு மக்களையும், அண்டை நாடுகளையும் அச்சுறுத்திக்

கொண்டிருந்த ஒரு சர்வாதிகாரிக்கு எதிரான போர் நடக்குமென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மதிப்பீடு மேலும் கூறுவதாவது. மேக்ஸ்டோத் என்பவரின் மதிப்பீட்டின் அடிப் படையில் நேரம் திடீரென முடிவடைந்து விடு கின்றது என்று கிரேட் பிரமிட்டில் குறிப்பிடப் பட்டுள்ள ஆரூடம் ஒரு மிகப் பெரிய காலச்சக்கரத்தின் முடிவையும், புதியகாலத்தின் ஆரம்பத்தையும் குறிக்கிறது என்கின்றார். எனினும் பிரமிட் ஆனது உண்மையில் உலக அழிவைக் குறிக்கின்றதா? அல்லது மனிதர் களுக்கு இடையேயான உறவில் ஏற்படுகின்ற மாற்றத்தை குறிக்கின்றதா ? என்பது கேள்விக் குறியாகவே இருக்கின்றது என்கின்றார். எவ்வாராயினும் பொதுவாக இந்த ஆரூடங்கள் எல்லாம், மனித நாகரீகம் தரத்தில் தாழ்ந்துக் கொண்டே வந்து 2025 ஆம் ஆண்டு வாக்கில் முழுமையாக சிதைந்து, கடைசியில் ஒழுக்க நெறியுள்ள ஒரு புதிய சகாப்தம் மலரும் என்பதில் ஒருமித்த கருத்துடையதாக இருப்பது தெளிவாகிறது.

டைம்ஸ் ஆஃப் இந்தியா பத்திரிகையில் வெளியாகியுள்ள இன்னொரு கட்டுரையில் (29-8-1999) பெஜன் தாருவாலா மற்றும் ஜோத்சனா புத்ரன் கூறுவதாவது இந்தியா 2008, 2011-ல் சூப்பர் பவர் அந்தஸ்து உடையதாகி விடும் என்பது பல விதங்களில் சக்தியுள்ள நாடாகிவிடும். 2007 ஆம் ஆண்டு வாக்கில் மிகப் பெரிய அளவிலான ரயில் மற்றும் கார்கள் சொகுசாகவும், சப்தமில்லாமலும் பறக்கும் என்றும், விண்வெளி ஆராய்ச்சியில் மிக முக்கியமான இரகசியங்கள் வெளியாகும் என்றும் உள்ளது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள எல்லா வற்றையும் பற்றிய சுருக்கமான முடிவுரை :-

இந்த ஆரூடங்கள் முன்னறிவிப்புக்கள் மற்றும் ஆய்வு கட்டுரைகள் மூலமாக அறிவது என்னவெனில் பூமி என்னும் கோளமானது, வரலாறு ரீதியாகவும், பூகோள ரீதியாகவும் மிகப் பெரிய மாறுதலை அடையப்போகிறது என்பதும், ஒரு பொதுவான உலகம் தழுவிய கலாச்சாரமும் ஆன்மீக ஒருமைப்பாடும் எல்லா இன மக்களுக்கிடையேயும் நிலவும் என்பது. இந்த மாற்றம் ஏறக்குறைய இந்த நூற்றாண்டின் ஆரம்ப கால 20 ஆண்டுகளுக்குள் நிறை வேறக் கூடிய அறிகுறிகள் பிரகாசமாக இருக்கின்றன.

இந்த மாற்றத்தில் இயற்கையின் பங்கு மிக அதிகமாக இருக்கும் என தெரிகிறது. திடிரென உண்டாகும் இயற்கை பாதுகாப்புகள், 5 தத்துவங்களும் கூட சுகம் அளிக்கக்கூடிய விதத்தில் உதவுவதோடு இதன் சக்திகள் மிகவும் மகத்தானவை என்பதையும் மனிதனுக்கு உணர்த்துவதாக இருக்கும். மேலும் நிச்சயிக்கப்பட்டதை எந்த ஒரு மனிதராலும் மாற்ற முடியாது என்பதும் தெளிவாகிவிடும்.

உலக வரலாறும், பூகோளமும் சாசுவத உலக நாடகத்தில் சக்கரம் போன்று அதே போல திரும்ப திரும்ப சுமார் 5000 ஆண்டு காலத்திற்கு ஒரு முறை நடக்கும்.

நாஸ்டர் டாமும், மற்றவர்களும் ஆரூடம் கூறியிருப்பதைப் போல, புது யுகம், அடுத்த தலை முறைக்கு முன்பாகவே மலரும். உலக மாற்றத்தில் இயற்கையின் பங்கு மிக முக்கிய மானதாக இருக்கும்.

ஆதலால் உலக நிகழ்வுகள் ஒரு படிப்பினையாக இருப்பினும், அறிவியல் ரீதியான ஆய்வுகள், நிகழவிருக்கும் அழிவு அல்லது பாதிப்புகள் பற்றி முன்கூட்டியே எச்சரிப்பதன் மூலம் ஒத்துழைப்பு தருவதாக இருக்க வேண்டும். இதைவிட முக்கியமானது ஆன்மீக உண்மைகளை பகுத்து உணர்ந்து, ஆன்மீக இயக்கப் பணிகளில் நம்பிக்கை

கொண்டு நடப்பது அவசியம். ஏனெனில் விஞ்ஞானம் வரையரைக்கு உட்பட்ட ஒன்று தான். ஆன்மீக ஞானத்தின் மூலம் மூன்றாவது கண் (ஞானக் கண்) திறக்கும். மற்ற விலங்கினங் களுக்கு ஆப்த்துக்களை முன் கூட்டியே உணரக்கூடிய சக்தி இருப்பதைப் போல நம்மாலும் உணர முடியும். இயற்கையும் தேவைக்கேற்ப சமநிலையை அமைதியாக உருவாக்கும்.

இயற்கை சீற்றத்தினால் உண்டாகும் பாதிப்புக்கள் அடிக்கடி நிகழ்வதும் அதிகரிப்பது மாக இருக்கும் நேரத்தில் தான் ஒழுக்கமான நல்ல குழந்தைகளை பாதுகாப்பதற்காக கடவுள் அவதரிக்கின்றார். இது 2004 ஆம் ஆண்டில் ஏற்பட்ட இயற்கை அழிவின் போது ஏற்பட்ட அனுபவத்தின் வாயிலாக அறிந்த தெய்வீக செய்தியாகும். நடப்பது எதுவானாலும் எல்லோருக்கும் நன்மை பயப்பதாக இருந்தால் விரைவிலேயே நடக்கட்டுமே.

### பாரதம்

பாரதம் அழியாத பூமி. மற்றவையெல்லாம் அழியக்கூடியது. இந்துக்கள் அவர்களுக்குள் சண்டையிட்டுக் கொள்ள மாட்டார்கள். பாரதம் மிகச் சிறியது அழியாதது. ஏனெனில் இது சிவபரமாத்மாவின் அவதார பூமி.

அரசியலும், மதமும் கைகோர்த்துச் செல்லக்கூடிய அப்படிப்பட்ட நேரம் சீக்கிரத்திலேயே வந்து கொண்டிருக்கிறது. இதன் பிறகு உலகில் பாரதம் வெற்றி முகத்தில் இருக்கும். பாரதம் உலகின் கலங்கரை விளக்காக இருக்கும். உலகிலுள்ள ஒவ்வொருவருடைய கண்ணும் பாரதத்தின் மீதே இருக்கும். பாரதம், ஆன்மீக உணர்வைத் தூண்டுகிறது என்று எல்லோரும் அனுபவம் செய்வார்கள். பாரதம் கடவுளின் அவதார பூமியாக இருப்பதால் என்றென்றும் முக்கியமானதாகவும் நிலையான சிறப்புக்குரியதாகவும் இருக்கும்.

### மரியாதை

தான் மரியாதைக்குரியவராக ஆகிவிடும்பொழுது, தனக்கு மரியாதைகள் தானாகவே வரும். சரி, மரியாதைக்குரியவராக ஆவது எப்படி ? இதற்கு ஒருவர், தனது மனதை ஆக்கபூர்வ சிந்தனையுடையதாக விருத்தி செய்து கொள்ள வேண்டும். பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் தன்னை சான்றோனாக மேம்படுத்திக் கொள்ளும் குறிக்கோளோடு வளர்ச்சியையும், மாற்றத்தையும் தன்னிடம் கொண்டு வர வேண்டும்.

நிகழ்காலத்தின் நிஜத்தை புரிந்து நடந்தால் எதிர்காலம் வசமாகி விடும்

பயணத்தின் தொலைவைக் கண்டு மலைத்துவிடாமல்
முயற்சி என்ற பாதையில் முதல் அடியை இன்றே வையுங்கள்

# காலத்தின் மகிமை

இப்போது சங்கமயுகம் கல்பத்தின் கடைசி யுகம். ஆகையால் இந்த நேரம், அனைவரும் மிகவும் கவனம் செலுத்த வேண்டிய நேரமாக இருக்கின்றது. அடுத்து வரும் வினாடிகள் எப்படி இருக்கும் என்று முன் கூட்டியே நேரம் அறிவிக்குமா? இப்போது கூட சில குழந்தை கள் கேட்கிறார்கள். நாடகம் முடிகிறது. உலகம் மாறும் என்றால் எப்போது என்று சிறிதளவா வது துப்பு கிடைக்குமா? இன்னும் 20 ஆண்டு காலம் பிடிக்குமா? அல்லது இன்னும் 10 ஆண்டுகள் என யூகிக்கலாமா? பாபா கூறுகிறார்: உலக மாற்றம் அல்லது அழிவு என்பது ஒருபுறமிருக்கட்டும். உங்களது உடல் எப்போது அழியும் என்று உங்களால் கூற முடியுமா? அந்த நாள், எந்த நாள் என்று உங்களுக்குத் தெரியுமா? சில குழந்தைகள் இது பற்றிய இறுதிச் சடங்குகளையும் கூட முன் கூட்டியே செய்து கொள்வதையும் பார்க்கின்றீர்கள். ஏன்? உத்தரவாதமில்லை என்பதால் தானே! ஆதலால் காலத்தின் முக்கியத்துவம் பற்றி உணருங்கள். இந்த சங்கமயுகம் மிகக்குறைவான நாட்களைக் கொண்டதாக இருக்கின்றது. ஆனால் இந்த நேரம் தான் மிக உயர்ந்த சில லக்ஷியத்தை அடையக்கூடிய நேரமாகவும் இருக்கின்றது. ஏனெனில் இந்த சிறிய யுகத்தில்தான் மிகப் பெரியவரான அதிமேலான தந்தை (SUPREME FATHER \ GOD) வருகின்றார். மற்ற யுகங்களில் வருவதில்லை. ஆகையால் இந்த நேரத்தில்தான் அடுத்த கல்ப முழு வதற்குமான விதை விதைக்க வேண்டியவர் களாக இருக்கிறீர்கள். அதாவது அடுத்து வரும் கல்பத்தில் உலக சாம்ராஜ்யத்தின் அதிகாரியாக ஆக வேண்டுமா? அல்லது பூஜைக்குரிய தேவதை ஆக வேண்டுமா? அல்லது இந்த இரண்டு பாக்கியத்தையும் அடைய வேண்டுமா? இதற்கான விதை, இப்போதுதான் விதைக்க வேண்டும். இதைப் போன்ற ஒரு காலம் கல்பம் முழுவதிலும், வேறு எந்த யுகத்திலாவது இருக்கிறதா என்றால் இல்லவே இல்லை. காரணம்! அனைத்து ஆன்மாக்களின் தந்தை பரமாத்மா. குழந்தைகளுக்கு கைமேல் பலனாக மிகப் பெரும் பாக்கியத்தை அளிக்கின்ற நேரம் இப்போதுதான். அந்த பாக்கியம் என்ன வென்று நீங்கள் அறிவீர்களா? சொர்க்க சாம்ராஜ்யத்தை அடைகின்ற அதிர்ஷ்டம். இந்த மாதிரியான அதிர்ஷ்டத்தை பகவானைத் தவிர வேறு எவரேனும் கொடுக்க முடியாது. வேறு எந்த ஒரு காலத்திலும் கொடுக்கப்படுவது மில்லை. இப்போது நீங்கள் மாஸ்டர் சர்வசக்தி வான் என்ற அந்தஸ்த்தைப் பெற முடியும். ஆதலால் உங்கள் சுயமரியாதையையும், காலத்தின் மகிமையையும் உணருங்கள்.

75 ஆண்டுகள் கடந்துவிட்டன. இப்போது அலக்ஷியமாக இருந்து விட்டால் உங்கள் அதிர்ஷ்டம் குறைந்து விடும். நான் நன்றாகவே முயற்சி செய்கிறேன். எனது நடத்தை மிகவும் சிறப்பாகவே இருக்கின்றது. எனது இலட்சியத்தை நிச்சயமாக அடைந்து விடுவேன். பின் தங்கிவிட மாட்டேன். எல்லாம் நன்றாகவே நடக்கும். இப்படிப்பட்ட மெத்தனப்போக்கு உள்ளதா என சோதியுங்கள்.

ஆதலால் காலத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து மிக்க கவனமாகவும், மிகவும் விவேகமுள்ளவராகவும், எச்சரிக்கையுடன் இருப்பவராகவும் ஆக வேண்டும்.

இப்போது உலகம் முழுவதிலுமுள்ள ஆன்மாக்கள் மிகவும் துக்கத்திலும், அசாந்தியிலும் இருக்கின்றார்கள். அவர்களுக் கெல்லாம் தந்தை பரமாத்மாவின் அறிமுகம் கிடைக்க வேண்டும். நீங்கள் இதில் உதவி செய்வீர்களேயானால் அவர்கள் பெரிதும் மகிழ்ச்சியடைவார்கள். உலக சூழ்நிலை நாளுக்கு நாள் மிகவும் மோசமாகிக் கொண்டே யிருக்கிறது. இது அதிகரித்துக் கொண்டுமிருக் கிறது. உச்ச நிலையையும் அடைந்து விட்டது.

இதன் பின்னர் என்ன நடக்கும். முடிவு. இந்த முடிவின் பலன் என்னவாக இருக்கும்? ஒரு நல்ல ஆரம்பத்தின் துவக்கமாக இருக்கும் இதை நம்புவார்களா? மாட்டார்களா? இந்த சிந்தனை வேண்டாம். உங்களுக்கு தந்தை யாரோ, அவரேதான் அவர்களுக்கும் தந்தை. ஆதலால் சகோதரர்களாகிய அவர்களுக்கும் இந்தச் செய்தியைக் கூறுங்கள்.

அதிகாலை, அமிருதவேளையின் போது, குழந்தைகளினுடைய யோக நிலை எப்படி இருக்கிறது என்பது பற்றி சுற்றிப் பார்த்து வந்தபோது என்ன பார்த்தேன்? எப்போது வேண்டுமானாலும் நிகழக்கூடிய பேராபத்தான சூழ்நிலையை எதிர் கொள்ளவும், அமைதி சக்தியின் அதிர்வலைகளைப் பரப்பவும், போதுமான சக்தியை தேவி, தேவதைகளாக யிருக்கின்ற குழந்தைகள் சேமித்துவிட்டார்களா என்றால் இன்னும் குறைவாகவே உள்ளது என்பதுதான், என்றாலும் கூட குழந்தைகள் மிக நன்றாகவே சேவை செய்து கொண்டிருக் கின்றார்கள் என உற்சாகப்படுத்துகின்றார். இன்றைய தருணத்தில், குழந்தைகளுக்கு மிக முக்கியமாக அவசியமாயிருப்பது டச்சிங் பவர் மற்றும் கேச்சிங் பவர். ஏனெனில் வரும் காலங்களில் இப்போதிருக்கிற வசதிகளெல்லாம் இருக்காது. ஆன்மீக சக்தி மூலமாகவே தந்தை யிடமிருந்து வழிகாட்டுதலைப் பெற முடியும். ஆதலால் உங்களைச் சோதித்துப் பாருங்கள். தந்தையிடமிருந்து வரும் எச்சரிக்கைகளை மனதால் புத்தியால் உணர முடிகிறதா என்று பார்க்க வேண்டும். இதற்கான வெகுகால அப்பியாசமும் அவசியமாக இருக்கிறது. இதற்காக மனம் கிளீயராகவும், கிளீனாகவும் இருக்க வேண்டும். அதாவது யாரைப் பற்றியும் மனதில் கிஞ்சித்தும் எதிர்மறை எண்ணம் இல்லாமல் தெளிவாகவும், சுத்தமாகவும் இருக்க வேண்டும். மேலும் ஸ்தூல கர்மேந்திரி யங்களை விருப்பம்போல் நடத்த முடிவதைப் போல், மனமும், புத்தியும் விருப்பத்திற்கிணங்க நடத்தக்கூடிய வசத்தில் இருக்க வேண்டும். விஞ்ஞானம் அதன் உச்சத்தைத் தொட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால் ஆன்மீக அமைதி சக்தி, அந்த சக்தியை வெல்லும் போது மாற்றம் என்பது நிகழும். ஆகையால் அமைதி சக்தியின் சேமிப்பு வங்கியை நிரப்பிக் கொள்ளுங்கள்.

வீட்டுக்குத் திரும்பிச் செல்ல வேண்டிய நேரத்தில் தந்தை தனியாகச் செல்லமாட்டார். ஆனால் யாரெல்லாம் தந்தைக்குச் சமானமாகி யிருக்கின்றார்களோ, அவர்களையெல்லாம் தன்னோடு அழைத்துச் செல்வார். இது கவனத்தில் இருக்க வேண்டும். தந்தை எப்போது செல்கின்றாரோ, அப்போது தான் அவரோடு செல்ல முடியும். இதற்குள்ளாக தாமரை மலர் போன்று ஆகிவிடுங்கள். தந்தையின் நினைவில் மூழ்கியிருங்கள். அப்போது தந்தை கட்டளை இடுவார். மணி யோசையும் கேட்கும்.

இப்போது மனதை சக்திசாலி ஆக்கிக் கொள்ளுங்கள். உங்களிடமிருந்து அமைதி சக்தியானது எல்லோருக்கும் கிடைக்கட்டும். ஏனெனில் அப்போது உங்கள் சொற்பொழிவை கேட்பதற்கு யாரும் தயாராக இருக்க மாட்டார்கள். பாடம் கேட்கவும் வரமாட்டார்கள். ஆதலால் அவ்வப்போது அடிக்கடி உள்நோக்கு முகமாக இருந்து, அமைதி சக்தியை நிரப்பிக் கொள்ளுங்கள். ஆரம்ப காலத்தில் என்ன நடந்ததோ, அது மீண்டும் நடக்கும்.

உலகில், நிலைமை மோசமாகிக் கொண்டி ருக்கும் வேளையில் மனிதர்கள் தமோபிரதான மாகவும், மனக்குழப்பத்தால் தவறாக நடந்து கொள்ள முற்படுவார்கள், எனினும் தந்தை கூறியிருப்பதைப் போல உங்களிடம் நிரம்பியுள்ள ஆன்மீக சக்தியின் காரணமாக, நீங்கள் அவர்களுக்கு ஒரு ஒளி போன்றே தென்படுவீர்கள். ஸ்தூல உருவம் அவர்கள் கண்களுக்குத் தென்படாது. இப்படியெல்லாம் நடக்கும். ஆதலால் தொடர்ந்து முயற்சி செய்யுங்கள். ஃபரிஷ்தா ஆகுங்கள்.

# சிறப்பான சிவஜெயந்தி பவளவிழா

*பி.கு. ஆதி லட்சுமி, ரத்தன் பஜார்*

பவளவிழா பவளவிழா பரமாத்மா,
அவர்தம் திவ்ய ஜெயந்தி விழா.
பதீத உலகில் வந்த பரமாத்மா,
பாவன உலகை உருவாக்கும் பவளவிழா,

கல்ப கல்பமாய் வந்திடும் பரமாத்மா,
கல்யாணகாரியாகி சேவை செய்த பவளவிழா
அசுர குணங்களை அழிக்க வந்த பரமாத்மா
இராம ராஜ்யத்தை உருவாக்கும் பவளவிழா.

பிரம்ம பாபா உடலில் வந்த பரமாத்மா
உத்தமர்களை உருவாக்கும் பவளவிழா
ஞானக்கடலாகிய பரமாத்மா,
அஞ்ஞான இருளை அகற்றும் பவளவிழா.

ஞான யோகத்தை கற்பிக்க வந்த பரமாத்மா
ஸ்ரீமத்தால் சிரேஷ்டமாக்கும் பவளவிழா
அன்னையர்க்கெல்லாம் அன்னை பரமாத்மா
சேயாக நம்மை பாலனை செய்த பவளவிழா

தயாசாகர் அன்புக்கடல் பரமாத்மா,
தங்க உலகை உருவாக்கும் பவளவிழா
பரந்தாமம் அழைத்து செல்லும் பரமாத்மா
அவர் நினைவால் தூய்மையாக்கும் பவளவிழா

சத்யுகம் எனும் சொர்க்கத்தை
சகஜ இராஜயோகத்தால் படைக்கும் பரமாத்மா
பதீதர்களாய் வாழும் நம்மையெல்லாம்
பவித்திர தேவதையாக்கும் பவளவிழா

மன்மனாபவ என்ற மந்திர வாக்குமூலம் பரமாத்மா
மனிதனை தேவனாக்கும் பவளவிழா
தேக அபிமானத்தை நீக்கிய நிராகார் பரமாத்மா,
ஆத்ம அபிமானியாக மாற்றும் பவளவிழா,

உலகமே தேடுகின்ற பரமாத்மா,
எல்லோருக்கும் ஒரே தந்தை எனப்புரிய வைத்த பவளவிழா
இனிமையான பாபா பரமாத்மா,
இனிய விட்டிற்கு அழைத்து செல்லும் பவளவிழா

# ஸ்ரீ கிருஷ்ணரின் பிறப்பு



ஒரு பக்கம் சம்பூரணமாகிவிட்டதன் அடையாளமாக முரசொலி. இன்னொரு பக்கம், புது உலகம் ஸ்தாபனை ஆகிக் கொண்டிருக்கிறது என்பதன் அடையாளமாக புதிய காட்சிகள். ஒரு பக்கம் பேரழிவின் உச்ச கட்ட கூக்குரல். இன்னொரு பக்கம், ஸ்ரீ கிருஷ்ணர் பிறந்து விட்டார் என்பதன் மகிழ்ச்சிக்குரல். புதிய உலகின் முதல் இளவரசர் பிறந்து விட்டார் என்ற செய்தி எங்கும் எதிரொலிக்கும். ஸ்ரீ கிருஷ்ணர் வெள்ளத்தில் ஆலிலையில் மிதந்து கொண்டு வரமாட்டார். பூமியின் நிலப்பரப்பானது மூன்று பங்கு தண்ணீரால் சூழப்பட்டு ஒரு பங்கு நிலப்பரப்பு மட்டும் இருக்கும் என்ற காரணத்தால், மிதந்து வந்ததாகக் குறிப்பிடப் பட்டிருக்கலாம். மேலும் பாரதம் ஃபரிஷ்தாக்களின் பூமியாகப் போகிறது என்பதாலும் அம்மாதிரியாகச் சித்தரிக்கப்பட்டிருக்கலாம். அதாவது நீர் சூழ்ந்திருக்கும் பகுதியே வெகுவாக இருப்பதன் காரணமாக கிருஷ்ணருடைய பிறப்பு, அந்த சமயத்தில் நிகழ்ந்திருப்பதன் காரணமாக, புது யுகத்தின் முதலாவது தளிர் இலை, அதாவது முதலாவது ஆத்மா, முதலாவது இளவரசர் பிறந்து விட்டார், வந்துவிட்டார் என்ற மகிழ்ச்சிகரமான செய்தி எங்கும் பரவி விடுகிறது. மூன்று பங்கு தண்ணீருக்கிடையே ஒரு பங்கு நிலப்பரப்பு, ஒரு இலைக்கு ஒப்பாகக் கருதப்பட்டிருக்கிறது போலும். மேலும் இந்தக்காட்சியைத் தான் கோல்டன் துவாரகை நீருக்குள்ளிருந்து வெளி வந்தது எனவும் குறிப்பிட்டிருக்கிறார்கள். பாபா கூறுகின்றார் : குழந்தைகளே ! பழைய உலக அழிவும் முதலாம் இளவரசர் ஸ்ரீ கிருஷ்ணரின் பிறப்பும் ஒரே சமயத்தில் இருக்கும். இதற்கான முரசொலி ஒலிக்கும். முரசொலி யின் சப்தம் உரக்க ஒலிக்க வேண்டுமானால், முரசின் மத்தளப் பகுதி சிறிது வெப்பத்துடன் இருக்க வேண்டியது அவசியமாகிறது. ஆகையால், முரசொலி எழுப்பப்படுவதற்கு முன்பாக, உங்களுடைய யோக அக்னி ஜுவாலையுடன் எரிவதற்கான தயார் நிலையும் அவசியம். இம்மாதிரியான முயற்சியில் ஈடுபட்டிருக்கிறீர்கள். அப்படித்தானே ? விநாசத்தை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருப்பவர்களும் கூட முயற்சியில் அர்ப்பணித்துக் கொள்ளுங்கள். அப்போது வெற்றியானது, விரைவில் உங்களுடையதாகி விடும்.

**மனம் சோர்வடையும் நேரங்களில் மகிழ்ச்சியான தருணங்களை அசைபோடுங்கள் மீண்டும் பொலிவு பெறுவீர்கள்**

ஆசிரியரும் பிரசுரிப்பவரும் பி.கு. அண்ணபூர்ணா, பிரஜாபிதா பிரம்மாகுமாரிகள் ஈஸ்வரிய விஷ்வ வித்யாலயம், சாந்திதாமம், பிளாட் எண்: 3702, Q-96, 3வது அவின்யு, அண்ணாநகர், சென்னை-40 அச்சிட்டோர் தா. தியாகேசன், தங்கேஷ் பிரிண்டர்ஸ், சென்னை-5
R.No.49463/87